638

# சிவகாமி தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு

638

17 JUN 1959




TB
031,6 (ம)
N57
139649

சி[illegible]ளிஷிங் ஹௌஸ்
[illegible]வகுண்டம்

அணா 9

# சிவகாமி தமிழ் வாசகம்

638
4-58

## நான்காம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 DEC 1958
MADRAS

ஆசிரியர்:
வித்துவான்: இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா,
தமிழாசிரியர்
கிறித்தவக் கலாசாலை, சென்னை.

SIVAGAMI PUBLISHING HOUSE

சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீவைகுண்டம் :: திருநெல்வேலி ஜில்லா
சேலம் & திருநெல்வேலி ஜங்ஷன்.

1957

விலை அணா 9.
நயா பைசா 56.

காப்பிரைட்]

திருத்திய பதிப்பு 1953
நான்காம் ,, 1957

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008.
139649

Approved by the Madras Text-Book Committee for class use Vide Page 41 of Fort St. George Gazette Part I B, dated 19—5—54.

T3
031, 6(U)
M57

சிவகாமி பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

# முன்னுரை

'சிவகாமி தமிழ் வாசகம்' என்னும் இப்புத்தக வரிசை அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது. இவ்வரிசையிலுள்ள புத்தகங்கள் மொழி வளர்ச்சி, சொல் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி என்னும் துறைகளில் உயர்ந்து விளங்குதலைக் காணலாம். வசன பாடங்களோடுள்ள தொடர்பு பற்றி அவற்றின் இடையிடையே செய்யுட் பாடங்களிற் சில சேர்க்கப்பட்டுள்ளன.

பாடங்களின் அடியில் அரும்பதங்கள், வினாக்கள், பயிற்சிகள் முதலியவை உரைநடை ஆற்றலை வளர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பாடங்கள் தோறும் கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சிகளை மாணவர்கள் கவனத்துடன் செய்வார்களாயின் மொழியில் பற்றும் அறிவும் பெறுவர். மற்றும் திருத்தமாகப் பேசவும், எழுதவும் மாணவர்களுக்கு எளிதில் இயல்வதாகும். திருத்தமாகப் பேசுதலும், எழுதலும் மொழி வளர்ச்சிக்கு அடிப்படை. அவையே தமிழ் மொழியின் மேம்பாட்டிற்குத் தேவை. அவற்றைப் புகட்டுவதே இப்பாடப் புத்தகத்தின் நோக்கமாகும்.

ஆதலால், இவ்வரிசைப் புத்தகங்களைக் கண்ணுறும் ஆசிரியர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும் இவ்வரிசைப் புத்தகங்களைப் பாடப்புத்தகங்களாக்கி மாணவர்களுக்கு நலம் உண்டாகச் செய்வதோடு என்னையும் இத்துறையில் ஊக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா.

# பொருளடக்கம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தேசீய கவி பாரதியார் | ... | 5 |
| 2. | கரும்பு | ... | 10 |
| 3. | சடையப்ப வள்ளலும் கம்பரும் | ... | 14 |
| 4. | ஏடு காத்த கிழவி | ... | 19 |
| 5. | நாய் — பசு | ... | 24 |
| 6. | மின்சாரம் | ... | 26 |
| 7. | சொன்ன சொல் தவறலாகாது | ... | 31 |
| 8. | பட்டு | ... | 36 |
| 9. | தமிழன் | ... | 41 |
| 10. | மாமல்ல புரம் | ... | 44 |
| 11. | முகம்மது நபி | ... | 48 |
| 12. | நால்வர் நண்பினர் | ... | 52 |
| 13. | தேனீ | ... | 58 |
| 14. | நல்ல தீர்ப்பு | ... | 63 |
| 15. | மாணவர் கடமை | ... | 68 |
| 16. | பாப்பா — பாட்டு | ... | 72 |
| 17. | கலிங்கம் வென்ற காவலன் | ... | 74 |
| 18. | தங்கம் (சுயசரிதை) | ... | 79 |
| 19. | கிராமக் கைத்தொழில் | ... | 83 |
| 20. | கண்ணனும் குசேலரும் I (நாடகம்) | ... | 89 |
| 21. | கண்ணனும் குசேலரும் II (நாடகம்) | ... | 92 |
| | செய்யுட் பகுதி | ... | 97 |
| | குறிப்புரை | ... | 103 |

# சிவகாமி தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

## 1. தேசீயகவி பாரதியார்

திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரம் என்று ஒரு ஜமீன் உள்ளது. அங்குச் சீவலப்பேரி சின்னசாமி அய்யர் என்பார் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் இலட்சுமி அம்மாள். சின்ன சாமி அய்யர் ஜமீன்தாரிடத்தில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு 1882–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சுப்பிரமணியன் என்று பெய ரிட்டு அன்போடு வளர்த்து வந்தார். குழந்தைக்கு ஐந்தாவது வயது நடக்கும் பொழுது இலட்சுமி அம்மாள் இறந்துவிட்டாள். தாயை இழந்த பிள்ளையைச் சின்னசாமி அய்யர் அதிகக் கவலை யோடு வளர்த்து வந்தார்.

பாரதியாருக்குத் தக்க வயது வந்ததும் அவர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். சின்னசாமி அய்யர் தமக்கு ஒழிந்த நேரங்களில் பாரதியாருக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். திருக்குறள், நாலடியார் போன்ற அரிய நூல் களைப் பாரதியார் கற்றார். பாரதியாருக்குத் தமிழ் மொழியில் அளவில்லாத பற்று உண்டாயிற்று. அவர் ஏழாவது வயதிலேயே கவிகள் எழுத ஆரம்பித்துவிட்டார்.

எட்டையபுர ஜமீன்தார் தமிழ்ப் பற்றுடைய வர்; புலவர்களை ஆதரிப்பவர். சின்னசாமி

அய்யர் அரண்மனைக்குச் செல்லும் பொழுது பாரதியாரும் உடன் செல்வார். ஜமீன்தாரைப் பார்க்க வந்த புலவர்கள் இவர் படித்துக் காட்டி விளக்கும் பாடல்களைக் கேட்டு வியப்பார்கள். அவர்கள் இவரைப் '**பாரதி**' என்று சிறப்பித்தனர். '**பாரதி**' என்பது சரஸ்வதிக்குப் பெயர். அப்பட்டப் பெயரே பின்னர் நிலைத்து விட்டது. ஜமீன்தாரிடம் பாரதியார் தம்பாடல்களைப் படித்துக் காட்டுவார். ஒரு சமயம் ஜமீன்தாரே சின்னசாமி அய்யரிடம் "பாரதியாரால் எட்டையபுரம் சிறப்படையும்" என்று கூறியது உண்டு.



பாரதியாருக்குப் பதினைந்தாவது வயது நடக்கும் பொழுது சின்னசாமி அய்யர் இறந்து விட்டார். தாயும் தந்தையும் இல்லாத பாரதியாரை அவரது அத்தையான குப்பம்மாள் கருத்துடன் காப்பாற்று வாராயினர். பாரதியார் திருநெல்வேலிக்குச் சென்று இந்து கல்லூரிப் பள்ளியில் கல்வி கற்றார். அங்கும் அவர் கலாசாலைப் படிப்பில் பெரிதும் கவலை கொள்ளவில்லை. கவிகள் எழுதுவதில் அவர் மனம் மூழ்கியது.

பாரதியார் இளமையிலேயே செல்லம்மாள் என்பவரை மணம் செய்துகொண்டார். மைந்தர் மணம் செய்துகொண்ட மறு ஆண்டில் சின்னசாமி அய்யர் இறந்தார். பாரதியார் காசிக்குச் சென்று அத்தையார் வீட்டிலிருந்து கொண்டு

கல்வி கற்று வந்தார். அங்கு அவர் வடமொழி, இந்தி என்ற இரு மொழிகளையும் கற்ருர்.

மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற பாரதியார் மேலும் கல்லூரிப் படிப்பு படிக்க ஆரம்பித்தார். அச்சமயம் நம் நாட்டு மக்கள் சுதந்தர உணர்ச்சியுடையவர்களாய் இருந்தனர். எட்டையபுரம் ஜமீன்தார் காசிக்குச் சென்றிருந் தார். அவர் வரும் பொழுது பாரதியாரையும் தம்முடன் அழைத்து வந்துவிட்டார். பாரதியார் ஜமீன்தார் விருப்பப்படி அரண்மனை வேலையில் அமர்ந்தார். பல பல புதிய பாட்டுக்களைப் பாடிப் பாரதியார் யாவரையும் மகிழ்வித்தார்.

தாய் மொழிக்கும் தாய் நாட்டிற்கும் தொண்டு புரியவேண்டும் என்ற அவா அவர் மனத்தில் தோன்றியது. அதனுல் பாரதியார் மதுரைக்கு வந்து சேதுபதி உயர்தரக் கலாசாலை யில் தமிழ் ஆசிரியராய் இருந்தார். பாரதியாருக்கு அவ்வேலையில் திருப்தி அளிக்கவில்லை. அவர் சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையில் ஆசிரியராய் அமர்ந்தார். உறங்கிக் கிடக்கும் தமிழர்களுக்கு உணர்ச்சியூட்ட எண்ணினுர். தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் கவிகள் பாடினுர். அவர் இயற்றிய கவிகள் மிகவும் எளி யன; புதியமுறையில் அமைந்தன. தமிழ் மக்கள் அவற்றைப் படித்தனர்; உணர்ச்சி பெற்றனர்.

அக்காலத்தில் சுதேசி இயக்கம் மும்முரமாக இருந்தது. பாரதியார் சுதேசமித்திரனை விட்டு விட்டு 'இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரிய

ராய்ச் சேர்ந்தார். அக்காலத்தில் அரசாங்கத்தார் தேசத் தொண்டர்களை அடக்குமுறைச் சட்டத்தால் சிறை செய்து வந்தனர். இந்தியா பத்திரிகை முதலாளியும் சிறை செய்யப்பட்டார். பாரதியாரும் சிறை செய்யப்படுவார் போலிருந்தது. நண்பர்கள் தூண்டுதலால் பாரதியார் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்.



பாரதியார் ஞாபகார்த்த மண்டபம்

புதுச்சேரியில் தான் பாரதியார் நூல்களில் பெரும்பாலானவை வெளிவந்தன. ஆனால் பாரதியார் புதுச்சேரியில் பட்ட துன்பங்கள் பல. சில ஆண்டுகளுக்குப் பின் பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கடையம் என்ற ஊரை அடைந்தார். அவர் மக்களுக்குள் வேற்றுமை பாராட்டாதவர்.

மீண்டும் பாரதியார் சென்னை வந்து சேர்ந்தார். திரும்பவும் சுதேசமித்திரன் பத்திரிகையாசிரியராய் அமர்ந்தார். அவருடைய தேகம்

நாளடைவில் நோயால் மெலிந்து வந்தது. 1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி பாரதியார் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

பாரதியார் பாடிய தேசீய கீதங்கள், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான நூல்கள் என்றும் அழியாப் புகழை அவருக்குத் தேடித் தந்தன. பாரதியாரின் நினைவாக எட்டையபுரத்திலே ஓர் அழகிய மண்டபம் கட்டியிருக்கிறார்கள்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| பழமை | மதித்திறன் | நிகரானவர் |
| அத்தகையார் | சிந்தனை | பழுதற |
| நூற்றாண்டு | கூர்ந்து | கலாசாலை |

### வினாக்கள்

1. சுப்பிரமணிய பாரதியாரின் தாய் தந்தையர் யாவர்?
2. பாரதியார் காசி செல்லக் காரணம் என்ன?
3. பாரதியார் எந்தெந்த மொழிகளைக் கற்றார்?
4. பாரதியார் புதுச்சேரி செல்லக் காரணம் என்ன?

### பயிற்சி

1. இந்நாட்டில் பல புலவர் வாழ்ந்தனர். இந்த வாக்கியத்தில் வினைச்சொல் எது? 'வாழ்ந்தனர்' என்பது அல்லவா? வினைச்சொல்லுக்கு மூன்று காலங்கள் உண்டு என்று அறிந்தீர்கள்.

வாழ்ந்தனர் — இறந்த காலம்
வாழ்கின்றனர் — நிகழ் காலம்
வாழ்வர் — எதிர் காலம்



## 2. கரும்பு

கரும்பு நன்செய் நிலங்களிலும் புன்செய் நிலங்களிலும் பயிராகின்றது. நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களில் கரும்பு செழித்து வளரும். வெப்பமான நாடுகளில்தான் கரும்பு பயிராக்கப் படும். நிலத்தை நன்ருய் உழவேண்டும். சிறந்த எருப்போட வேண்டும். பின் நன்ருய் முற்றிய கரும்பைத் துண்டங் துண்டங்களாய் வெட்டிச் சாய்வாக நடுதல் வேண்டும். பூமிக்குள் ஒரு கணுவும், பூமியின்மேல் ஒரு கணுவும் இருக்கும் படி நடவேண்டும். அவ்வாறு நடும்பொழுது ஒவ் வொரு கணுவிற்கும் இடையில் இடம் விட வேண்டும். பூமிக்குள் இருக்கும் கணுவிலிருந்து வேர்கள் தோன்றும்.

கரும்பு பெரிய கழிபோல் இருப்பதால் கருப் பங் கழி என்றும் கூறுவர். ஒரு கருப்பங் கழியில் பல கட்டுக்கள் காணலாம். அவை கணு எனப்

படும். கரும்பின் சோகை நீளமாகவும் சொர சொரப்பு உடையதாகவும் இருக்கும். அவை கூர்மையானவை, கரும்புகளுள் பலவகை உண்டு. செங்கரும்பு, நாமதாரிக் கரும்பு, வெண் கரும்பு, சன்னக்கரும்பு என்பன சில. கரும்பு அடர்த்தி யாக மூங்கில்போல் புதர் புதராக இருக்கும்; கரும் பின் சோகைகளை அவ்வப்போது கழித்துவிடு வார்கள்.

கரும்பு ஒவ்வொரு தூறுக்கும் ஐந்து ஆறு இருக்கும். கரும்பிற்குப் பூ உண்டு. கரும்பின் நுனியில் சோகைகள் இருக்கும். கரும்பின் அடிப் பாகம் மிகுந்த சுவையாக இருக்கும். மேலே போகப் போக இனிப்புக் குறையும்; உப்புக் கரிக் கும். கரும்பு தடித்த மேற்பட்டையை உடையது. அது கரும்பிலுள்ள சாறு வெயிலினால் சுண்டி விடாதபடி காக்கின்றது.

கரும்பு விளையும் நிலங்களில் பூ சாரம் குறைந்துவிடும். ஆதலால் கரும்பு விளையும் நிலங் களுக்கு நிறைய எருப்போடவேண்டும். கருப்பங் கழி எட்டு அடி முதல் இருபது அடி வரையில் வளரும். கரும்பின் சோகை, வேர், அடிக்கட்டை, சக்கை முதலியன எருவாகவும் உபயோகப்படும். கரும்பிலிருந்து சர்க்கரை, வெல்லம், கற்கண்டு முதலியன செய்கிறார்கள்.

கரும்பு முற்றியபின் ஆலையிலிட்டுச் சாறு எடுப்பார்கள். கரும்பின் சாறு மிகுந்த சுவையுள் ளது. கரும்பாலை, கரும்பு மிகுதியாய் வளரும் இடங்களில் உள்ளன. அந்த ஆலையை மாடுகள் இழுக்கும். சாற்றை எடுத்தபின் அச்சாற்றை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். சாறு

பக்குவமாகக் காய்ந்ததும் அதனைத் தட்டுக்களிலும் அச்சுக்களிலும் ஊற்றுவார்கள். அச்சில் ஊற்றியது அச்சுவெல்லம் என்றும், தட்டில் ஊற்றியது உருண்டை வெல்லம் என்றும் கூறப்படும். கருப்பஞ் சாறு காயும்போது சிறிது சுண்ணும்பு நீரை ஊற்றினுல் அழுக்கெல்லாம் மேலே



திரண்டு வரும். அதனை ஒரு கரண்டியால் எடுத்தெறிந்து விடுவார்கள்.

கரும்பைத் தின்றால் பல் சுத்தமாகும்; பல் வெண்மையாகும். பொங்கற் பண்டிகையில் கரும்பு உபயோகிக்கப்படுகிறது. நம் நாட்டில் கரும்பு விளைந்தும் போதுமான அளவு சர்க்கரை கிடைப்பதில்லை. நாம் வெளி நாடுகளிலிருந்தும் சர்க்கரை தருவிக்கின்றோம். இக்காலத்தில் கரும்பாலைகளில் மின்சாரத்தின் உதவியினுல் சாற்றைப் பிழிகிறார்கள். சென்னையிலுள்ள பாரி கம்பெனியார் நெல்லிக்குப்பத்தில் பெரிய கரும்பாலை வைத்திருக்கிறார்கள். நாம் வாங்கும் பல வகை

யான மிட்டாய் வகைகள் அவர்களால் தயாரிக்கப் படுகின்றன.

'நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்'' என்பது முன்னோர் மொழி. கரும்புப் பயிர் மிக்க ஊதியம் தரக்கூடியது. ஆதலால் கரும்பை மிகுதியாகப் பயிர் செய்து சர்க்கரைத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுவது நம் கடமையாகும்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| நிலவளம் | தூரந் தூரமாக | சக்கை |
| துண்டந் துண்டமாக | கருப்பங்கழி | சாறு |
| புதர் புதராக | சுண்டிவிடாதபடி | அழுக்கு |

### வினாக்கள்

1. கரும்பு எவ்வாறு பயிரிடப்படுகிறது?
2. கரும்பில் எத்தனை வகை உண்டு?
3. தடித்த மேற்பட்டையால் விளையும் நன்மை என்ன?
4. கரும்பினால் செய்யக்கூடிய தொழில் யாது?

### கட்டுரைப் பயிற்சி

1. கரும்பின் உபயோகங்களைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

### பயிற்சி—1

1. நிலவளம், துண்டந் துண்டமாக, புதர் புதராக, அவ்வப்போது, போகப் போக, கடமை—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியம் எழுது.
2. இனிப்பு × கசப்பு - இதுபோல் எதிர்ப்பதங்களை எழுது:—
   நுனிப்பாகம் ×
   குறையும் ×
   வெண்மை ×

———

## 3. சடையப்ப வள்ளலும் கம்பரும்

தமிழ் நாட்டில் முன்பு கம்பர் என்ற ஒரு பெரும் புலவர் வாழ்ந்தார். அவர் கம்ப இராமா யணம் என்ற அரிய நூல் ஒன்றை இயற்றியுள் ளார். தமிழ் மொழிக்கு அழியாப் புகழை உண் டாக்கியவர்கள் திருவள்ளுவரும் கம்பருமே யாவர். திருவள்ளுவர் திருக்குறளேயும் கம்பர் இராமாயணத்தையும் இயற்றினர். கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல்.

சடையப்பவள்ளல் புதுச்சேரியில் வாழ்ந்தவர். அவருக்குச் சரராமன் என்ற பெயரும் உண்டு. அவர் மிகுந்த செல்வர். கும்பகோணத்திற்கு அடுத்த திருவெண்ணெய் நல்லூரிலும் அவர் வாழ்ந்தார். அவரும் அவர் முன்னேர்களும் கப் பல் வியாபாரம் செய்து வந்தனர். அவர் பெருஞ் செல்வராய் விளங்கினுர்.

சடையப்ப வள்ளல் என்ற பெயரே அவர் குணத்தை விளக்கும். வள்ளல் என்ருல் பொருள் என்ன? யார் எது கேட்டாலும் வரம்பில்லாமல் கொடுப்பவரே வள்ளல் எனப்படுவார்.

ஒரு நாள் சடையப்ப வள்ளல் வெளியில் செல்லப் புறப்பட்டபோது வீட்டின் தூண் ஒன்றைக் கையால் பிடித்துக்கொண்டு சிறுவன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவன் முகத் தில் மகிழ்ச்சி என்பது காணப்படவில்லே. ஏக்கம் குடிகொண்டிருந்தது. அச்சிறுவனேச் சடையப்ப வள்ளல் பார்த்தார். அவனேப்பற்றி விசாரித்தார்.

அவன் தாய் தந்தை அற்றவன் என்பதை அறிந்தார். அவனைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவர் தம் குழந்தைகளின் சுவடித் தூக்குகளைத் தூக்கிச் செல்லும் வேலையில் அச்சிறுவனை அமர்த்தினார். அவன் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் செல்வதும் அழைத்து வருவதுமாக இருந்தான். ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது அவன் கூர்ந்து கவனிப்பான். அவனுக்குக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. குழந்தைகளின் புத்தகங்களை அவன் எடுத்துப் படிப்பதும் உண்டு; அவனுக்குக் கல்வியிலிருந்த விருப்பத்தைச் சடையப்ப வள்ளல் அறிந்தார். அவனையும் பள்ளியிற் சேர்த்துப் படிக்க வைத்தார். சிறிது காலத்திற்குள் அவன் சிறந்த புலவனானான். அவனது அறிவைக் கண்டு சடையப்ப வள்ளல் மகிழ்ந்தார். அவர் அவனை வேலையாள் என்று கருதாமல் தமக்குச் சமமாக வைத்துக் கொண்டார். அவரே கம்பர் என்னும் பெரும் புலவர்.

சடையப்ப வள்ளலுக்கு அக்காலத்திலிருந்த மூன்றாம் குலோத்துங்க சோழனிடம் நெருங்கிய நட்பு உண்டு. சடையப்ப வள்ளல் கம்பரை அழைத்துச் சென்று சோழ அரசனிடம் சிறப்பாகக் கூறினார். சோழ மன்னன் கம்பரைப் பரீட்சித்துப் பார்த்தான். கம்பரின் பேரறிவு அவனுக்கு நன்கு விளங்கிற்று. சோழன் கம்பரைத் தன் பேரவைப் புலவராக வைத்துக் கொண்டான்; கம்பர் சோழ அரசன் அரண்மனையில் அவைக்களப் புலவரானார். கம்பர் தன் கவித் திறமையால் சோழனை மகிழ்வித்து வந்தார்.

கம்பருக்குத் திருமாலிடத்தில் அளவில்லாத பக்தி உண்டு. இராமனுடைய சரித்திரத்தை வட மொழியில் வால்மீகி முனிவர் இயற்றினுர். தமிழில் இராம சரித்திரத்தைக் கூறும் நூல் இல்லை. ஆதலால் கம்பர் இராம சரித்திரத்தை எழுதுவ தெனத் தீர்மானம் செய்து கொண்டார். அதற்கேற்ப, குலோத்துங்க சோழனும், சடையப்ப வள்ளலும் இராமாயணத்தை எழுதும்படி கம்பரைத் தூண்டினுர்கள். கம்பர் தம் கவித் திறமை தோன்ற இராமாயணத்தைப் பாடினுர்.



கம்பர் இராமாயணத்தைப் பாடி முடித்துச் சீரங்கத்தில் அரங்கேற்றினுர். அரங்கேற்றுதல் என்பது ஒருவர் தாம் இயற்றிய நூலைக் கற்ருேர் அவை முன் படித்துக் காட்டி எடுத்துச் சொல்லி அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல் ஆகும். அரங்கேற்றும் பொழுது அங்கிருந்தோர் "இத் தெய்வ நூலில் சடையப்ப வள்ளலைப்பற்றி

அதிகமாக உள்ளதே? ஆயிரம் பாட்டிற்கு ஒரு முறைசடையப்ப வள்ளலைப்புகழ்ந்தால் போதும்'' என்றனர். அப்பொழுது கம்பர் "நூறு பேர்க்கு ஒருவர் சடையப்ப வள்ளலைப்போல் இருப்பர் என்று எண்ணினேன். ஆனால் நீங்கள், சொல் வதைப் பார்த்தால் "சடையப்ப வள்ளல் ஆயிரத் தில் ஒருவர் போலும்'' என்று கூறினர்.

ஈழ நாடு என்பது இலங்கை. அங்குப் பரராச சிங்கன் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனைக் காண ஒரு தமிழ் நாட்டுப் புலவர் சென்றார். அக்காலத்தில் அந்நாட்டில் பஞ்சம் அதிகமா யிருந்தது. புலவர் ஈழ மன்னனைக் கண்டு சடையப்ப வள்ளலின் பெருமையைக் கூறி அவருக்கு ஒரு கடிதம் எழுதுமாறு கூறினர். ஈழ நாட்டு மன்னன் சடையப்ப வள்ளலுக்கு ஒரு கடிதம் எழுதினன். சடையப்ப வள்ளல் ஈழ நாட்டு மக்கள் படும் துன்பத்தைக் கண்டு மனம் பொறுது ஆயிரம் படகுகளில் அரிசியனுப்பி உதவினர்.

இத்தகைய வள்ளல்களால் அன்றோ நாடும், மொழியும், மக்களும் செழிப்புற இயலும்!

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| அமுதம் | வரம்பில்லாமல் | அஞ்சல் |
| கவிஞர் | கடை | மெலிந்தோர் |
| வள்ளல் | எல்லை | இல்லம் |
| மகிழ்வு | கொடை | இரப்போர் |
| சுவடித் தூக்கு | ஏக்கம் | இன்முகம் |
| பள்ளி | அடையா | பேரவை |

### வினுக்கள்

1. கம்பரை ஆதரித்தவர் யார்?
2. வள்ளல் என்பார் யாவர்?
3. கம்பர் எந்த அரசனுல் சிறப்பிக்கப்பட்டார்?
4. சடையப்ப வள்ளல் ஈழநாட்டு மன்னனுக்குச் செய்த உதவி யாது?

### பயிற்சி —1

1. கவிஞர், வருமானம். வரம்பில்லாமல் — இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.
2. மகிழ்வு — இவ்வார்த்தை வேறு எந்த விதமாகவும் உபயோகப்பட்டுள்ளது?
3. பேரறிவு, பேரவை. — எதிர்ப்பதங்களை எழுது.

### பயிற்சி — 2

கீழ் வருவனவற்றைப் படி:—

| (அ) | (ஆ) |
|---|---|
| அணில் | ஆடு |
| இலை | ஈயம் |
| உரல் | ஊதல் |
| எலி | ஏணி |
| ஒட்டகம் | ஓடம் |
| | ஔவை |
| | ஐயர் |

இவற்றில் (அ) பகுதியில் உள்ளவற்றில் முதல் எழுத்தையும் (ஆ) பிரிவிலுள்ளவற்றில் முதல் எழுத்தையும் எவ்வாறு உச்சரிக்கிருய்? அ — பிரிவில் உள்ளவற்றைக் குறுக்கியும்; ஆ — பிரிவில் உள்ளவற்றை நீட்டியும் உச்சரிக்கிருய் அல்லவா? குறுகிய ஓசையுடைய எழுத்து குற்றெழுத்து, நீண்ட ஓசையையுடைய எழுத்து நெட்டெழுத்து எனப்படும். இவற்றைக் குறில், நெடில் என்றும் கூறலாம்.

---

# 4. ஏடு காத்த கிழவி

இருநூறு ஆண்டுகளுக்கு முன் இராமநாத புரத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் சர்க்கரைப் புலவர் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த புலவர். சேதுபதி அரசர் அவரையும் அவர் முன்னோர்களையும் ஆதரித்தார். அதனால் சர்க் கரைப் புலவர் சிறந்த செல்வராக வாழ்ந்து வந் தார். அவர் வீட்டில் ஏடுகள் பல இருந்தன.

அக்காலத்தில் தென்னாட்டில் திருடர் பயம் அதிகம். கொள்ளைக் கூட்டத்தினர் செல்வர்கள் வீடுகளுக்குச் சென்று பொருள்களைக் கொள்ளை அடிப்பார்கள். அவர்கள் தாங்கள் வரப்போகும் நாளைக் குறித்து எழுதுவார்கள். அந்த நாளில் அவர்கள் தவறாது வருவார்கள். அப்பொழுது அவர்களிடம் பணம், நகை முதலானவற்றைக் கொடுக்காவிட்டால் வீட்டு மக்களைத் தூணில் கட்டி அடிப்பார்கள். வீட்டைத் தீ வைத்து எரிப் பார்கள். அவர்கள் செய்யக்கூடிய துன்பம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது.

சர்க்கரைப் புலவர் அக்காலத்துச் சேதுபதி அரசராலும், பெருஞ் செல்வர்களாலும் ஆதரிக்கப் பெற்றவர். அவர் அரசர்மீதும் பிரபுக்கள்மீதும் கவிகள் பாடியும் சொற்பொழிவு செய்தும் நிறைந்த செல்வம் பெற்றிருந்தார். அதனால் அவர் செல்வராய் விளங்கினார்.

சர்க்கரைப் புலவர் பெருஞ்செல்வர் என்பது எவ்வாறோ கள்வர் கூட்டத்தார்க்குத் தெரிய வந்தது. தெரிந்தால் அவர்கள் சும்மா விடுவார் களா? ஒரு நாள் சர்க்கரைப் புலவரிடம் ஓர் ஆள்

ஓலை ஒன்று கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனான். அதில் கள்வர் கூட்டத்தார் ஒருநாளைக் குறிப்பிட்டு அந்நாளில் வருவதாகக் குறித்திருந் தார்கள். அதனைக் கண்ட புலவருக்குச் செய்வது யாதெனத் தோன்றவில்லை. புலவர் சுற்றத்தார் களையும் வீட்டிலுள்ளாரையும் என்ன செய்யலாம் என்று கேட்டார். அனைவரும் கலந்து ஆலோசித் தனர். இக்காலம்போல் அக்காலத்தில் போலீஸ் பாதுகாப்பு இல்லை. ஆதலால் பணத்தையும், நகை களையும் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிப் புறக் கடையில் ஒரு குறித்த இடத்தில் புதைத்து வைத்து விடுவது என்னும் முடிவுக்கு வந்தார். அவ்வாறே புலவர் பணத்தையும் நகைகளையும் பெட்டியிலிட்டுப் பூட்டிப் பூமியில் புதைத்து வைத்தார். பின்னர், புலவர் குடும்பத்தோடு வேற் றூர்க்குச் சென்றார். வீட்டில் தள்ளாத முதிய கிழவி ஒருத்தியே இருந்தாள்.

குறித்த நாள் வந்தது; திருடர்களும் வந் தனர். வீட்டிற்குள் அவர்கள் நுழைந்தனர். முதிய கிழவி ஒருத்தியைத் தவிர வேறு யாரும் இல்லை. வீட்டில் அவர்கள் தேடிவந்த பொருள் களும் இல்லை. புலவர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்று அவர்களுக்குக் கோபம் பொங்கி எழுந் தது. சுற்றிப் பார்த்து வருகையில் ஓர் அறையில் ஓலைச் சுவடிகள் கட்டுக் கட்டாக ஏராளமாய் அடுக்கி வைத்திருந்ததைக் கண்டனர். கள்வர் தலைவன் இந்த ஓலைச்சுவடிகளை வண்டியில் ஏற்றுங்கள். அடுப்பெரிக்க உதவும் என்றான். அவ்வாறே கள்வர்கள் ஓலைச்சுவடிகளை வண்டி யில் ஏற்றுவாராயினர்.

கிழவிக்கு ஓலைச்சுவடிகள் வண்டியில் ஏற்றப் படுதலைத் தடுக்க வேண்டும் என்ற ஆசை அதிக மாயிற்று. "இந்த ஓலைச்சுவடிகள் அல்லவோ உண்மையில் நமக்குச் செல்வம். இவைகள் அன்றோ நம் குடும்பத்தில் பிறந்தவர்களைப் புல வர்களாகச் செய்தது. இவ்வோலைச் சுவடிகளைக்



கற்றுப் புலமை பெற்றதனால் அன்றோ இவ்வளவு செல்வம் சேர்க்க முடிந்தது. செல்வம் போனாலும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஓலைச் சுவடிகளை இழந்தால் என்ன செய்வது? பொருளை இழந்தே னும் ஓலைச்சுவடிகளைக் காப்பாற்றுதலே கடமை" என்று கிழவி தனக்குள் உறுதி செய்து கொண் டாள்.

கிழவி கள்வர் தலைவனை அணுகி, "அப்பா, இந்த ஓலைச் சுவடிகளை ஏன் ஏற்றிக்கொண்டி ருக்கிறீர்கள். இவை அடுப்பெரிக்கவும் பயன் படாதே. இவற்றை அங்கேயே வைத்து விடுங்

கள். அது உங்களுக்குப் பெரும் புண்ணிய மாகும்” என்று மனம் கரையுமாறு கூறினுள். கள்வர் தலைவன் அவள் வார்த்தையைக் கேட்க வில்லை. இனிப் பயனில்லை என்று கிழவி அறிந் தாள். பின் அவள், நான் பொருள் தருகிறேன்; அவ்வோலைச் சுவடிகளை வைத்து விடுங்கள்,” என்ருள். கள்வர் தலைவன், “பணமா? எங்கே காட்டு,” என்று கேட்டான். கிழவி அவ்வாறே கள்வர் தலைவனைப் புறக்கடைக்கு அழைத்துச் சென்ருள்; பெட்டி புதைத்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டினுள். கள்வர் தலைவன் ஆட் களை விடுத்துக் குழியைத் தோண்டிப் பெட்டியை எடுக்கச் சொன்னுன். அவ்வாறே அவர்களும் எடுத்தனர். கள்வர் தலைவன் பெட்டியைத் திறந்து பார்த்தான். பணமும் நகைகளும் இருந் தன. கள்வர் தலைவன் மகிழ்ந்தான். வண்டி யில் அடுக்கிய ஓலைச் சுவடிகளை இறக்கி வீட் டிற்குள் முன்போல் அடுக்கும்படி கட்டளை யிட்டான். அவ்வாறே கள்வர்கள் செய்துவிட்டுச் சென்றனர்.

‘பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வமே பெரிது’ என மதித்த கிழவியின் செயலை எண் ணிப் பாருங்கள். ஏடு காத்த கிழவியின் செயல் யாவராலும் போற்றத்தக்கது அன்ருே?

அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| சம்பவம் | உணுகி | பாதுகாப்பு |
| தீர்மானித்தனர் | தொகுத்து | புறக்கடை |
| வெறுங்கையோடு | வேற்றூர் | கரையுமாறு |

## வினாக்கள்

1. கொள்ளைக் கூட்டத்தினர் செயல் யாது?
2. கொள்ளைக் கூட்டத்தினர்க்கு அஞ்சிய சர்க்கரைப் புலவர் யாது செய்தார்?
3. கொள்ளைக் கூட்டத்தினர் ஏடுகளை வண்டியிலேற்றியபோது கிழவி யாது எண்ணினாள்? யாது செய்தாள்?

## பயிற்சி – 1

1. நிகழ்ந்த, சம்பவம், பண்டுதொட்டு, எத்துணை, தொகுத்து, வேற்றூர்–இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.
2. உயிர்க் குறில் ஒவ்வொன்றையும் முதலில் அமைத்து நான்கு நான்கு உதாரணங்கள் எழுது.
3. உயிர் நெடில் ஒவ்வொன்றையும் முதலில் அமைத்து மூன்று மூன்று உதாரணங்கள் எழுது.

## பயிற்சி – 2

1. அ, இ, உ, எ, ஒ – இவை எத்தகைய ஓசை உடையன? என்ன பெயர்? ஏன் அப் பெயர் வந்தது?
2. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – இவை எத்தகைய ஓசை உடையன? என்ன பெயர்? ஏன் அப் பெயர் வந்தது?
3. கவனி :–

அ, இ, உ, எ, ஒ – இவை குற்றெழுத்துக்கள்
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – இவை நெட்டெழுத்துக்கள்.

உயிர் எழுத்துக்கள் – 12

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ. ஓ, ஔ,

— · —

## 5. நாய்

1. வீட்டு வாசல் காப்பவன்
வேட்டை ஆட வல்லவன்
ஆட்டுக் கிடைப் பாண்டியன்
அன்பு மிக்க தோழன்.

2. உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய் போல்
வாய்த்த துணை உண்டோ?

### பசு

1. பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப்
பால்தர நீ என்ன
பக்குவம் செய்வாய் அதனைப்
பகருவையோ பசுவே!
உச்சியுடல் நக்கி யீன்ற
உடன் உனது கன்றை
உயிர் எழுப்பும் மாயம் ஏதோ
உரைத்திடுவாய் பசுவே!

2. வாய்க்கினிய பால் தருவாய்
வயற்கு உரமும் தருவாய்
வண்டி கட்டக் காளையும் நீ
வளர்த் தளிப்பாய் பசுவே!
தாயில்லாப் பிள்ளைகட்குத்
தாயாவாய் நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
தானவாய் பசுவே!

*கவிமணி*—தேசிக விநாயகம் பிள்ளை

### வினுக்கள்

1. ஆட்டுக்கிடைப் பாண்டியன் – யார்?
2. நாய் செய்யக்கூடியன யாவை?
3. நாய் நன்றியுடையது என்பதை எவ்வாறு அறிவிக்கிறுர்?
4. பசு யாவர்க்குத் தாயும் மருத்துவச்சியும் ஆகும்? எப்படி?

### கட்டுரைப் பயிற்சி

1. நாயைப்பற்றி எட்டு வரிகள் எழுது.
2. பசுவைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

### பயிற்சி – 1

கீழ்வருவனவற்றைப் படி:-

அம்மனிதன், அப்பக்கம், அவன், அது,
இவ்வீடு, இப்பக்கம், இவன், இது.

இவைகளைப் படித்து என்ன அறிகிருய்?

ஒரு பொருளையோ, மனிதனையோ, குறித்துக் காட்டுதலைச் சுட்டுதல் என்பர். அ, இ, என்பன சுட்டிக் காட்டுவதால் சுட்டெழுத்துக்கள் ஆகும். உப்பக்கம்- உவன் என்பன அருமையாக வரும். எனவே, 'உ' என்பதும் சுட்டெழுத்தாகும்.

அ, இ, உ என்பன ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் பொழுது சுட்டெழுத்துக்கள் ஆகும். சுட்டிக் காட்டாவிட்டால் சுட்டெழுத்துக்கள் ஆகா.

### பயிற்சி – 2

சுட்டு, சுட்டில்லாதன – என்பவற்றை எடுத்து எழுது:

| | | | | |
|---|---|---|---|---|
| அரசன் | இலை | அடுப்பு | அணை | இறகு |
| அம்மனிதன் | இது | அம்மரம் | அவை | இதை |
| உப்பக்கம் | இப்பலகை | உரல் | உலக்கை | இப்படம் |

# 6. மின்சாரம்

மக்களின் அறிவு வளர்ந்து கொண்டே வருகிறது. அறிவு வளர வளர மக்களின் வாழ்க்கை நிலையும் மாறிக்கொண்டே வருகிறது.

முன் நாளில் தீ வேண்டும்போது இருகற்களைத் தட்டி நெருப்பை உண்டாக்கினார்கள். இங்ஙனம் தீ உண்டாக்கப் பயன்படும் கல்லைச் **'சிக்கி முக்கிக்கல்'** என்று கூறுவார்கள். வேறு சிலர் இரண்டு மரத்துண்டுகளைத் தேய்த்தும் தீ உண்டாக்கினார்கள். அதனைத் தீக் கடைக்கோல் என்று கூறினர். மனிதன் அறிவு வளர வளரத் தீக்குச்சி செய்யும் முறையைக் கண்டுபிடித்தான்.

இந்நாளில் நகரங்களிலும் கிராமங்களிலும் 'பளிச்' சென்று ஒளிவீசும் விளக்குகளைக் காண்கிறோம் அல்லவா? விறகு இல்லாமலும் கரி இல்லாமலும், நீராவி இல்லாமலும் இயந்திரங்கள் வேலை செய்தலும், வண்டித்தொடர் ஓடுதலும், விசிறி சுற்றுதலும் காண்கின்றோம்.



அவற்றை அவ்வாறு செய்ய இயக்கும் சக்தி ஒன்று அளிக்கப்படுகிறது. அந்தச் சக்தி யாது? அதனை மின்சாரம் என்பர். அம்பர் என்ற மணியைத் தேய்த்த காலத்தில் அதிலிருந்து ஒரு சக்தி உண்டாவதை மனிதன் அறிவினால் அறிந்தான். ஈல் என்று ஒருவகை மீன் உள்ளது. அதனிடம் இந்தச் சக்தி இயல்பாய் இருக்கிறது. மேகத்தில் தோன்றும் மின்னலிலும் இடியிலும் இச்சக்தி இருக்கிறது. இந்தச் சக்தியைக் கொண்டு செய்யப்படும் காரியங்கள் பல.

மின்சார சக்தியை எப்படி உண்டாக்கலாம்? மிகுந்த உயரமான இடங்களிலிருந்து விழும் நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் எடுக்கலாம். நீர் வீழ்ச்சிகளின் கீழ் இயந்திரங்களை அமைத்து அவற்றை இயங்கச் செய்வார்கள். இயந்திரங்களில் அமைத்துள்ள காந்த சக்தியின் மூலமாக மின்சார சக்தியைப் பெறுகிறார்கள். அந்தச் சக்தியைச் சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள். அம் மின்சார சக்தியைக்கொண்டு பல தொழில்களைச் செய்கிறார்கள். நீர்வீழ்ச்சி இல்லாத இடங்களில் நீரை மிக உயரத்தில் தேக்கி விழச்செய்து இயக்குவார்கள். பின் அதிலிருந்து மின்சாரம் எடுக்கிறார்கள்.

மின்சாரத்தில் ஒளி, ஒலி இயக்கும் சக்தி என்ற மூன்றும் அமைந்துள்ளன. மின்சாரத்தால்





விளக்குகள் எரிகின்றன. மின்சாரத்தால் விசிறிகள் சுற்றுகின்றன. மின்சாரம் சமையல் செய்யவும் உதவுகிறது. மின்சாரத்தினுல் மாவு அரைக்கும் இயந்திரம், நெல்குத்தும் இயந்திரம், அச்சு அடிக்கும் இயந்திரம், எண்ணெய் எடுக்கும் இயந்திரம், கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் முதலியன ஓட்டப்படுகின்றன.

மின்சார வண்டிகள் சென்னை, பம்பாய் முதலான இடங்களில் ஓடுகின்றன. மின்சாரத்தின் உதவி கொண்டே பெரிய தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. மின்சாரத்தினால் அநேக வேலைகள் மிகவும் விரைவாக முடிகின்றன. பல நாட்களில் ஒரு மனிதன் செய்யவேண்டிய வேலையை மின்சாரம் சிலமணிநேரத்தில்செய்துமுடிக்கிறது.




மின்சாரத்தைத் தந்தியின் மூலம் மிக்க தூரம் கொண்டு செல்லலாம். இதனால் "தந்தி" அடித்தால் விரைவில் செய்திகள் அனுப்பப் படுபவருக்குக் கிடைக்கிறது. தூரத்திலுள்ளவர்களோடு நேரில் பேசுவது போல் பேசிக் கொள்வதற்கு ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு டெலிபோன் அல்லது தொலைப்பேசி என்று பெயர். பேசினால் இருவர் நேராகப் பேசுவதுபோல் இருக்கும். இதுவும் மின்சாரத்தினால் நடைபெறுவதே ஆகும்.



சினிமா என்னும் படக்காட்சிகளைக் காண்கிறோம் அல்லவா? அப்படக் காட்சியும் இம் மின்சாரத்தின் துணைகொண்டே நடைபெறுகிறது. ஆடைகளை மடித்துத் தரவும், நிலங்களுக்கு நீர் இறைக்கவும், ஏர் உழவும், மிக உயரமான கட்டி

டங்களில் கீழ்த் தளத்திலிருந்து மேல் தளத்திற்கு மக்களைத் தூக்கிச் செல்லவும், ஆழமான சுரங்கங்களில் இறங்கவும் உபயோகமுள்ள பொறிகளை இயக்க வல்லது மின்சாரமே.

மின்சாரத்தின் துணைகொண்டு 'எக்ஸ்—ரே' என்ற கருவியால் நம் உடலுக்குள் இருக்கும் பொருள்களையும், எலும்பு முறிவுகளையும் அறிகிறோம். எனவே, மின்சாரம் வைத்தியத்திற்கும் பயன்படுகிறது. மின்சாரம் உடலில் சுளுக்கு ஏற்பட்டால் நீக்குவதற்கும் பயன்படுகிறது.

மிக்க தூரத்தில் பாடுபவர்களது பாட்டையும் சொற்பொழிவு செய்பவர்கள் பேச்சையும் நாம் வானொலியின் மூலம் கேட்கிறோம். இவ் வானொலியும் மின்சாரத்தின் துணைகொண்டே நடைபெறுகிறது. இக்காலத்தை மின்சார காலம் என்று கூறலாம்.



பிள்ளைகளே, மின்சாரம் செய்யும் உதவிகள் மிகப் பல. அது செய்யும் அற்புதங்களும் புதுமைகளும் மிகப் பலவாகும். மனிதன் அறிவு ஆராய்ச்சித் திறனால் எய்தக் கூடிய நலங்கள் பலவாகும் என்பது இதனால் விளங்குகிறது அல்லவா?

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| மாறிக்கொண்டே | துவளுதல் | நாடா |
| சாதனம் | நீர்வீழ்ச்சி | கீழ்த்தளம் |
| தீக்கடைக்கோல் | இயக்குவார்கள் | முறிவு |
| நீராவி | தொலைப் பேசி | வானொலி |

### வினுக்கள்

1. இக்காலத்தில் மின்சாரம் செய்வன யாவை?
2. மின்சாரத்திஞல் உண்டாகும் பயன்களை எழுது.

### பயிற்சி — 1

1. மாறிக்கொண்டே, சாதனம், துவளுதல், தேக்கி, மடித்து, முறிவு – இவற்றைத் தனித் தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டு.

2. அறிவு வளர வளர மக்களின் வாழுக்கை நிலையும் மாறிக்கொண்டே வருகிறது.

3. மக்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன?

மேலே உள்ள இரண்டு வாக்கியங்களையும் படி.

என்ன அறிகிருய்?

முதல் வாக்கியம் ஒரு கருத்தை விளக்குகிறது.
இரண்டாவது வாக்கியம் கேள்வியைக் கேட்கிறது.
முதல் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.
இரண்டாவது வாக்கியம் விஞ வாக்கியம் எனப்படும்.

### பயிற்சி — 2

1. மூன்று செய்தி (சாதாரண) வாக்கியங்களும் மூன்று விஞ வாக்கியங்களும் எழுது.
2. கந்தன் வேலை செய்தான்—இது செய்தி வாக்கியம்.

| | | |
|---|---|---|
| 1. கந்தன் என்ன வேலை செய்தான்? | -எ | இவை விஞ வாக்கியங்கள் |
| 2. கந்தன் ஏன் வேலை செய்தான்? | –ஏ | |
| 3. கந்தன் வேலை செய்தாஞ? | –ஆ | |
| 4. கந்தன் வேலை செய்தாஞே? | –ஓ | |
| 5. கந்தன் செய்த வேலை யாது? | –யா | |

எ, யா, ஆ, ஓ, ஏ,—என்னும் ஐந்தும் விஞப்பொருளைத் தருவதால் விஞ எழுத்துக்கள். விஞ=கேள்வி.

6. இராமன் பாடம் படித்தான்—இது என்ன வாக்கியம்?

மேலே காட்டியபடி இவ்வாக்கியத்தை விஞ வாக்கியமாக மாற்று.

———

# 7. சொன்ன சொல் தவறலாகாது

தென்னுட்டில் ஓர் ஊரில் எலிகளின் துன்பம் அதிகமாயிருந்தது. வீடுகளில் எலிகள் மிகப் பெருகிப் பொருள்களை நாசம் செய்தன. விளை புலங்களிலும் எலிகளால் பயிர்களுக்குக் கேடு உண்டாயிற்று.

ஒரு சமயம் அவ்வூருக்குப் புதுமையான மனிதன் ஒருவன் வந்தான். அவன் அவ்வூரார் படும் துன்பத்தை அறிந்தான். அவ்வெலிகளை எல்லாம் தான் ஓட்டிவிடுவதாக அவன் கூறினுன். அவன் அவ்வூர்த் தலைவனை நோக்கி, "ஐயா' இவ் வூரிலுள்ள எலிகளை எல்லாம் ஓட்டி அவைகளால் இனி ஒரு பொழுதும் துன்பம் உண்டாகாதபடி செய்தால் எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டான். அவன் மொழிகளைக் கேட்ட ஊரா ருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அவ்வூர்த் தலைவன், "எலிகளை எல்லாம் ஓட்டி அவைகளால் உண்டாகும் துன்பத்தை நீக்கினுல் ஆயிரம் ரூபாய் தருவோம்" என்ருன்.

அப்புதியவன் நடுத்தெருவில் போய் நின் ருன். அவன் அணிந்திருந்த ஆடைகள் வேடிக் கையாக இருந்தன. அப்புதியவன் எலிகளை ஓட்ட என்ன செய்யப் போகிருன் என்று அறிய ஊரில் உள்ளவர்கள் கூடிவிட்டனர். அப்புதியவன் நடுத்தெருவிற்குச் சென்று ஒரு புல்லாங் குழலை எடுத்துக்கொண்டு வாசித்தான். கீதம் இனிமை யாக இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒவ் வொரு வீட்டினின்றும் எலிகள் ஓடி வந்தன. பெரிய எலிகளும் சிறிய எலிகளும் எங்கெங் கிருந்தோ ஓடிவந்தன. அவன் குழலை வாசித்துக்

கொண்டு ஒவ்வொரு தெருவாய்ச் சென்றான். எல்லாத் தெருக்களிலும் எலிகள் ஓடிவந்தன.

அவ்விசித்திரக் குழலோன் குழலை வாசித்துக் கொண்டே சென்றான். எலிகளும் ஒன்றின் மேல் ஒன்றாய்த் தாவிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்தன. அவ்வூர் மக்கள் அவ்வெலிக் கூட்டத்தை அவன் எவ்வாறு அழிக்கப் போகிறான் என்று பார்க்க விழைந்து பின்னே கூட்டங் கூட்



டமாய்ப் போயினர். அவ்வூருக்குச் சற்று தூரத்தில் ஓர் ஆறு இருந்தது. அக்குழலோன் ஆற்றினை அடைந்தான். அவன் ஒரு பரிசல் கொண்டு வரச் சொன்னான். பரிசல் கொண்டுவரப்பட்டது. அதில் அப்புதியவன் ஏறிக்கொண்டான். பரிசல் நீரில் மிதந்துசென்றது. ஆற்றில் பெருவெள்ளம் போய்க்கொண்டிருந்தது. எலிகள் நீரையும் கவனிக்காமல் இசையில் மயங்கி நீரில் விழுந்தன. பரிசல் நடு ஆற்றை அடையும் முன்னரே எலிகள் எல்

லாம் ஆற்றில் விழுந்து இறந்தன. ஊரார் அவற்றைக் கண்டு அளவிலா ஆனந்தங் கொண்டனர்.

எலிகளை எல்லாம் ஆற்றில் விழும்படி செய்த பின் அவ்விசித்திரக் குழலோன் ஊர்த் தலைவன் வீட்டிற்கு வந்தான். அவன் அவர்கள் தனக்குக் கொடுப்பதாக வாக்களித்த ஆயிரம் ரூபாயைத் தருமாறு கேட்டான். எலிகளோ ஒழிந்து விட்டன; அவை இறந்தன; இனி உயிர்பெற்று வாரா; என்பதனால் ஊர்த்தலைவனும் பிறரும் அப்புதியவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க மனம் இசையவில்லை. ஊர்த் தலைவன் அவனை நோக்கி "ஐயா, எங்கள் ஊரார் மிகவும் ஏழைகள். எலியின் தொந்தரவு எங்களால் பொறுக்க முடியவில்லை. அதனால் நாங்கள் முதலில் அத்துன்பம் நீங்கினால் போதும் என்று எண்ணி ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சம்மதித்தோம். ஏதோ இயன்றதைக் கொடுக்கின்றோம். நீங்கள் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்" என்று சொல்லி நூறு ரூபாய் கொடுத்தான்.

அப் புதியவன் "எனக்குக் கொடுப்பதாகச் சொன்ன ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிடுங்கள். சொன்ன சொல் தவறலாகாது. நீங்களே ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள். உங்கள் வாய்ச் சொல்லைக் காப்பாற்றுங்கள்" என்று கூறினான்.

அப்பொழுது தலைவன் வீட்டினுட் சென்று மீண்டுவந்து, "இருநூறு ரூபாய் தந்து விடுகிறோம். அதற்கு மேல் எங்களால் கொடுக்க இயலாது" என்று கண்டிப்பாய்ச் சொன்னான்.

அம்மொழிகளைக் கேட்ட குழலோன், "ஐயா, காரியம் முடியும்வரை ஒரு வார்த்தையும், காரியம்

முடிந்த பிறகு வேறொரு வார்த்தையும் பேசுவது உங்களைப் போன்றோர்க்கு அழகல்ல. எனக்குத் தருவதாகச் சொன்ன ஆயிரம் ரூபாயைக் கொடுங்கள். கொடுக்க மறுத்தீர்களானால், அதனால் வரும் கேட்டை அனுபவிக்க நேரிடும். பின்னே என்னைக் குறை கூற வேண்டாம்," என்றான். தலைவன் "செய்வதைச் செய்துகொள்." என்றான்.

குழலோன் நடுத்தெருவிற்குச் சென்றான். முன்போல் குழலை எடுத்து வாசிக்கலானான். உடனே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் குழந்தை



கள் ஓடி வரலாயினர். பெற்றோர்கள் எவ்வளவு தடுத்தும் சிறுவர்களை நிறுத்த முடியவில்லை. சிறுவர் கூட்டம் திரண்டு செல்லக் குழலோன் ஆற்றை நோக்கி நடந்தான். அப்பொழுதுதான் ஊராருக்கு அவனிடத்தில் அச்சம் ஏற்பட்டது. குழந்தைகள் ஆற்றில் எலிகளைப்போல் விழுந்து இறந்து விடுவார்களே என்ற பயம் உண்டாயிற்று. உடனே ஊர்த்தலைவன் ஆயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு ஓடோடி வந்தான். "ஐயா,

இதோ உங்களுக்குச் சேரவேண்டிய ஆயிரம் ரூபாய் இருக்கிறது. பெற்றுக்கொள்ளுங்கள். எங்கள் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள். அறியாது நாங்கள் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்," என்று கூறி ஆயிரம் ரூபாயைக் கொடுத்தான். குழலோன் தொகையைப் பெற்றுக் கொண்டு, வாசித்தலை நிறுத்திவிட்டுத் தன்வழிச் சென்றான். சிறுவர்களும் சிறுமிகளும் தம் தம் இல்லங்களை அடைந்தனர்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| தென்னாடு | எங்கெங்கிருந்தோ | மிதந்து |
| விளைபுலம் | விசித்திரம் | வஞ்சகம் |
| உபாயங்கள் | விழைந்து | ஓடோடி |
| புல்லாங்குழல் | பரிசல் | குழலோன் |

### வினாக்கள்

1. எலிகளால் விளைந்த தீமைகள் யாவை?
2. விசித்திரக் குழலோன் எவ்வாறு எலிகளை ஓட்டினான்?
3. உங்கள் வாய்ச் சொல்லைக் காப்பாற்றுங்கள் அதுவே அழகு! — இதனை யார் யாரிடம் எதன் பொருட்டு ஏன் கூறினான்?
4. ஆயிரம் ரூபாய் கொடுக்க மறுக்கவே விசித் திரக் குழலோன் செய்தது என்ன?

### பயிற்சி

1. உபாயம், விநோதம், விசித்திரம், விழைந்து, நயமாக, ஓடோடி இச்சொற்களைத் தனித்தனியே வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. 'இவன் ஒரு பைத்தியக்காரன் போலும்!'—இவ் வாக்கியத்தைக் கவனியுங்கள். இது ஆச்சரியத்தைக் காட்டுகிறது அல்லவா? இவ்வாறான வாக்கியங்களுக்கு 'வியப்பு வாக்கியம்' என்று பெயர். இப்பாடத்திலிருந்து இரண்டு வாக்கியங்கள் 'வியப்புப் பொருளைத் தருகின் றனவாக எடுத்து எழுது.

# 8. பட்டு

மக்கள் அணியும் ஆடைகள் மூவகைப்படும். அவை பட்டாடை, பஞ்சு ஆடை, கம்பளியாடை என்பன. அவற்றுள் விலை உயர்ந்தது பட்டாடை. அது மென்மையானது, பளபளப்புள்ளது. பருத்தியாடை ஏழை முதல் பணக்காரர் ஈருக யாவரும் எல்லாத் தேசங்களிலும் எக்காலத்திலும் அணியக்கூடிய ஆடை ஆகும்.

பட்டு எப்படி உண்டாகிறது என்பதை நாம் இங்கு அறிவோம். பட்டுப் பூச்சியால் நூற்கப் படுவது பட்டு. பட்டுப் பூச்சி ஒரு சிறிய பூச்சி. அது முட்டையிடும். அம்முட்டைகள் கடுகினும் சிறியவை. ஒரு பூச்சி பல முட்டைகள் இடும். ஒரு பூச்சி சுமார் நானூறு முட்டைகளிடும். முட்டை இட்டவுடன் தாய்ப்பூச்சி இறந்துவிடும். பட்டுப் பூச்சி முசுக்கட்டைச் செடியின் இலையின் மீது முட்டையிடும். முசுக்கட்டைச் செடியின் இலையில் வேறு பூச்சிகள் எவையும் வசிப்பதில்லை.

முட்டைகள் யாவும் சூரிய வெப்பத்தினுல் பொரியும். முட்டைகள் பொரிந்து சிறிய புழுக்கள் வெளியே வரும். அப்புழுக்கள் சாம்பல் நிறமாக இருக்கும். அப்புழுக்களுக்கு முசுக்கட்டை இலையே உணவாகும். அவை ஒரு வாரத்தில் வளர்ந்து தோல் உரிக்கும். தோலுரிக்குமுன் அப்புழுவைப் பார்த்தால் அப்புழுவிற்குப் பதினுறு கால்களும் பதினுன்கு கண்களும் இருக்கும். அப்புழுக்கள் தோல் உரித்ததும் வெண்மை நிறம் அடையும். இவ்வாறு அப்புழுக்கள் நாலைந்து

நாட்களுக்கு ஒரு முறையாக நாலைந்து முறை தோல் உரிக்கும். அவ்வாறு தோல் உரிக்கும் பொழுதெல்லாம் நிறம் மாறிக்கொண்டே வரும். அப்புழுக்கள் இருபத்து மூன்று நாட்களில் நான்கு முறை தோல் உரிக்கும். நான்காவது




முறை தோல் உரித்தபின் பத்து நாட்கள் நன்றாக இரையைத் தின்று பருத்துக் கொழுத்து விடும். இறுதியில் அது பொன்னிறமாய் இருக்கும்.

புழு நன்றாய்ப் பருத்துக் கொழுத்தபின் கூடுகட்ட ஆரம்பிக்கும். கூடு கட்டும் நிலையை அடையும் புழுக்கள் உணவு உண்பதில்லை. இந் நிலையை அடைவதற்கு ஒரு மாதம் ஆகும். அப் புழுக்கள் முசுக்கட்டைச் செடியின் கிளைகளில் கூடுகட்டத் தொடங்கும். அவை கூடு கட்டு வதற்கு வாலின் கீழ்ப்புறத்திலிருந்து ஒரு வகைப் பிசினை வெளிப்படுத்தும். அப்பிசின் காற்றுப் பட்டவுடன் நூல் இழையாக மாறும். பட்டுப்

புழுதான் உள்ளே இருந்துகொண்டு தன்னைச் சுற்றிக் கூடுகட்டிக்கொள்ளும். அவ்வாறு கூடு கட்டிக்கொள்ள அதற்கு மூன்று நாட்களாகிறது. இந்நிலையில் அது பிறிதொரு முறை தோல் உரிக்கும். அது இறுதியில் இறகு முளைத்துப் பட்டுப் பூச்சியாகின்றது. அது இறகு முளைத்து வெளிவரும் பொழுது கூண்டைக் கிழித்துக் கொண்டு வெளியே வருகிறது; இன்பமாய்ப் பறக்கிறது. இதுவே பட்டுப் பூச்சியின் வரலாறு ஆகும். அது சாம்பல் நிறப் புழுவாய் இருக்கும் பொழுது அரைக்கால் அங்குல நீளம் இருக்கும். நன்கு வளர்ந்து கூடுகட்டும் நிலையிலுள்ள புழு இரண்டங்குல நீளம் இருக்கும்.

பட்டு எடுக்க விரும்பும் மக்கள் அப்புழு இறகு முளைத்த பூச்சியாய்த் தானகக் கூட்டைக் கிழித்துக்கொண்டு வெளியே வருமாறு விடுவதில்லை. கூட்டைக் கிழித்துக்கொண்டு அது தானக வெளிப்பட்டால் நூல்கள் சிறு சிறு துண்டுகளாய்ப் போய்விடும். அதனல் அப்புழு இறகு முளைத்து வெளிப்படும் சமயத்தில் கூட்டினை எடுத்து வெந்நீரில் போட்டு விடுவார்கள். பட்டுப்புழு இறந்துபோய்விடும். பின் மக்கள் அத்தகைய கூடுகளைத் தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்வார்கள். அதன் பின்னர் நுனியைக் கண்டு பிடித்துக் கழிகளில் சுற்றிக் கொள்வார்கள். இரண்டாயிரம் கூடுகளுக்கு ஒரு பவுண்டு எடையுள்ள பட்டு கிடைக்கும். இத் தன்மையாக எடுக்கப்பட்ட பட்டு நூல்களால் பட்டாடைகள் நெய்யப்படுகின்றன.

பட்டு முதன் முதல் சீனுவில்தான் இருந்தது. பின்னர், ஜப்பான் நாட்டிற்குப் பரவிற்று. இதை ஐரோப்பியரும் மற்றோர்களும் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். இக்காலத்தில் பட்டுத் தொழில் எல்லா நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. தமிழ் நூல்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பட்டாடை நெய்யும் வழக்கம் நம் நாட்டில் இருந்தது என்று அறியலாம். இந்தியாவில் வங்காளம், மைசூர், காஷ்மீரம், கொள்ளேகால், பங்களூர், சேலம், காஞ்சிபுரம் முதலான இடங்களில் பட்டை உற்பத்தி செய்தலும் நெய்தலுமாகிய தொழில் நடைபெற்று வருகிறது.

பட்டாடையை அணிவதால் உடலின் வெப்பம் வெளியே போகாது. வெளி வெப்பம் உடலைத் தாக்காது; குளிரையும் தடுக்கும். பட்டு குடிசைத் தொழிலாகும். இத்தகைய தொழிலைப் போற்றி வளர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| பட்டாடை | வெப்பத்தினுல் | இழைகள் |
| ஈருக | பொரித்து | பிறிதொரு |
| நூற்கப்படுவது | உரிக்கும் | அரைக்கால் |
| பயன்படுவது | பிசின் | தாக்காது |

## வினுக்கள்

1. பட்டுப் புழுக்களைப்பற்றி அறிவது என்ன?
2. பட்டுப் புழு எப்பொழுது கூடு கட்டத் தொடங்கும்?
3. பட்டுப்புழு பட்டுப் பூச்சியாவது வரையில் தெளிவாக விளக்கி எழுது.

### கட்டுரையாக்கம்

பட்டு எடுக்கும் முறை, உண்டாகும் பயன் என்பவைபற்றி ஒரு கட்டுரை எழுது. (12வரிகள்)

இவைகளைப்படி:-

| | | |
|---|---|---|
| (அ) பாக்கு | (ஆ) சங்கு | (இ) தேய்வு |
| முடிச்சு | பஞ்சு | மார்பு |
| பட்டு | வண்டு | அலகு |
| பத்து | பந்து | அவ்வை |
| உப்பு | அம்பு | வீழ்து |
| பற்று | கன்று | பள்ளு |

### பயிற்சி — 1

அ - பிரிவில் நடு எழுத்துக்கள் வலிய ஓசையையுடையன. ஆதலால் வல்லினம் அல்லது வல்லெழுத்து என்று பெயர்.

ஆ - பிரிவில் நடு எழுத்துக்கள் மெல்லிய ஓசையையுடையன. ஆதலால் மெல்லினம் அல்லது மெல்லெழுத்து என்று பெயர்.

இ - பிரிவில் நடு எழுத்துக்கள் இடைப்பட்ட ஓசையையுடையன. ஆதலால் இடையினம் அல்லது இடையெழுத்துக்கள் என்று பெயர்.

## 9. தமிழன்

1. தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்

2. அறிவின் கடலைக் கடைந்தவனும்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்

3. கலைகள் யாவினும் வல்லவனும்
கற்றவர் எவர்க்கும் நல்லவனும்
நிலைகொள் ளும்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனும்

4, சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கே சொல்
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்.

5. யாழும் குழலும் நாதசுரம்
யாவுள தண்ணுமை பேதமெல்லாம்
வாழும் கருவிகள் வகைபலவும்
வகுத்தது தமிழெனல் மிகையலவாம்,

6. மானம் பெரிதென உயிர்விடுவான்
மற்றவர்க்கு உதவிடத் துயர்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
'தருவது மேல்' எனப் பேசிடுவான்.

— முன்னாள் ஆஸ்தான வித்துவான்
நாமக்கல் கவிஞர்: வே. இராமலிங்கம் பிள்ளை.

### வினுக்கள்

1. தமிழன் பெற்ற அமிர்தம் போன்ற நூல் எது?
2. தமிழன் எவற்றில் சிறந்தவன்?
3. தமிழன் இயல்புகள் யாவை?

### கட்டுரைப் பயிற்சி

'தமிழன்' என்ற தலைப்பு அமைத்து அவனுடைய செயல், ஒழுக்கம், குணம் முதலியவற்றை விளக்கிப் பத்து வரிகள் எழுது.

### பயிற்சி – 1

கீழ்வருவனவற்றைப் படி:-

| (1) | (2) | (3) |
|---|---|---|
| நாற்காலி | மதுரை | வருடம் |
| பலகை | பள்ளிக்கூடம் | மாதம் |
| புத்தகம் | கோயில் | பகல் |
| படம் | சென்னை | மணி |

| (4) | (5) | (6) |
|---|---|---|
| கண் | வாய்மை | படித்தல் |
| கால் | செம்மை | பயிற்சி |
| வேர் | வெண்மை | ஓட்டம் |
| கிளை | கருமை | வருகை |

முதல் பிரிவில் உள்ளவை பொருளை உணர்த்துகின்றன.

இரண்டாம் பிரிவில் உள்ளவை இடத்தை உணர்த்துகின்றன.

மூன்றும் பிரிவில் உள்ளவை காலத்தை உணர்த்துகின்றன.

நான்காம் பிரிவிலுள்ளவை உறுப்பை உணர்த்துகின்றன.

ஐந்தாம் பிரிவிலுள்ளவை பண்பை உணர்த்து கின்றன.

ஆறும் பிரிவிலுள்ளவை தொழிலை உணர்த்து கின்றன.

அவை பொருள், இடம், காலம், சினை [உறுப்பு]. பண்பு, [குணம்] தொழில் என்பவற்றின் பெயர்களாகும். எனவே பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை:-

1. பொருட் பெயர் 4. சினைப் பெயர்

2. இடப் பெயர் 5. பண்புப் பெயர்

3. காலப் பெயர் 6. தொழிற் பெயர்

பயிற்சி – 2

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்துஎழுதி இன்னவகைப் பெயர்ச் சொற்கள் என்பதைக் காட்டு.

1. நான் சென்ற மாதம் சென்னைக்குப் போய்ப் புத்தகங்கள் வாங்கினேன்.

2. கந்தன் படித்தல், எழுதுதல், ஆட்டம் முதலியவற்றில் தேர்ந்தவன்.

3. கொக்கு பால் போல் வெண்மை ஆனது.

# 10. மாமல்லபுரம்

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் பல்லவ அரசர்களில் சிம்ம விஷ்ணு என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மகன் மகேந்திர வர்மன் என்னும் பெயருடையவன். அவன் மகன் நரசிம்ம வர்மன். இம்மூவர் காலமும் மிகச் சிறந்த காலம். நரசிம்ம வர்மனுக்கு மாமல்லன் என்ற பட்டப் பெயர் உண்டு. அவனுல்தான் மாமல்ல புரம் அழகுபெற்று விளங்கியது. அவனுக்கு உரிய பட்டப்பெயரை அவ்வூர் தாங்கி இருக்கிறது.

மகாபலிபுரம் சென்னையிலிருந்து தெற்கே முப்பத்திரண்டு மைல் தூரத்தில் உள்ளது. கடற்கரை ஓரத்தில் அமைந்த அவ்வூரில் சிற்பங்கள் பல இன்றும் காணக் கிடக்கின்றன. அவை சீர்குலைந்த நிலையில் இன்று காணப்படுகின்றன. மகாபலிபுரத்திற்குச் சாலை மார்க்கமாகவும், பக்கிங்காம் வாய்க்கால் வழியாகவும் சென்னையிலிருந்து செல்லலாம்.

கற்களில் சிற்பங்கள் செய்தல், ஒரே கல்லில் கோயில் அமைத்தல், குன்றுகளையும் மலைகளையும் குடைந்து கோயில் கட்டுதல் என்பன அங்குக் காணப்படுகின்றன.

அவ்வூரில் உள்ள ஏழு கோயில்களில் கற் சிற்பங்கள் நிறைந்துள்ளன. நரசிம்ம வர்மன் காலத்தில் அவை தோன்றின. இன்றும் அவை காண்பார் வியந்து போற்றும்படியாக உள்ளன. பாண்டவர் இரதங்கள் என்று அங்கு ஐந்து கோயில்களைக் காணலாம். அவை ஒற்றைக் கற்கோயில்

கள். கற்பாறைகளைக் குடைந்து செய்யப் பட்டவை. இவற்றைப் பாண்டவர் இரதங்கள் என்பர். பாண்டவர்கள் ஐவரல்லவா? ஆகவே ஐந்து கோயில்கள் உண்டு. அவர்களது மனைவி திரௌபதி. அவளுக்கும் ஒரு கோயில் உண்டு. பாண்டவர் இரதக் கோயிலில் சிலைகளும் உள்ளன.



மாமல்லபுரம் கல் ரதம்

திரௌபதி இரதம் என்பதில் துர்க்கா தேவியின் சிலை காணப்படும். இவைகளைப் பாண்டவர் கோயில்கள் என்று கூறுவது தவறு. இவை ஐந்தும் சிவன் கோயில்களே.

மகாபலிபுரத்தில் முதல் முதலாகக் காணப்படுவது மகிடாசுரமர்த்தனியின் குகைக் கோயில். ஆறு தூண்கள் அமைந்த மண்டபம் ஒன்று முன்புறத்தில் இருக்கிறது. இது கற்பாறையைக் குடைந்த கூடமாகும். இக்கோயிலின் மீது ஒரு கோயில் இருந்தது. அதன் உச்சியில் தொட்டிபோல் அமைந்துள்ளது. முன் நாளில் அதில் விளக்கு இரவும் பகலும் அவியாது எரிந்து

கொண்டிருக்கும். அவ்விளக்கின் ஒளியே இரவில் கடலில் வரும் கப்பல்களுக்குக் கரையைக் காட்டும் கலங்கரை விளக்கம் ஆகும். அதனைக் காணச்செல்வோர் உழக்கெண்ணெய் ஊற்றுவர். அதனால் அக்கோயிலில் உள்ள இறைவனுக்கு உழக் கெண்ணெய்ப் பெருமாள் என்று பெயர்.

மகாபலிபுரத்தில் பகீரதன் தவம் செய்வது சிற்பத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் மனிதர், தேவர், மிருகங்கள் முதலான உருவங்கள் நூற்றைம்பதிற்கு மேல் உள்ளன. கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்ததைக் காட்டும் சிற்பம் ஒன்று உள்ளது. திருமால் பள்ளி கொண்டிருக்கும் அழகு கண் கொள்ளாக் காட்சியாகும். ஆதிவராக அவதாரச் சிற்பமும், திரிவிக்கிரம அவதாரச் சிற்பமும் மிக நேர்த்தியாக விளங்குகின்றன.

அந்தணன் ஒருவன் நீர்க்குடத்தைத் தோளில் சுமந்து நிற்பது, மான் ஒன்று ஆற்றோரத்துக்கு வருவது போல் இருப்பது, கீழ்ப்பக்கம் ஒரு கோயிலைச் சுற்றி முனிவர்கள் அமர்ந்து தவம் செய்தல், எதிரில் பூனை ஒன்று பின் கால்களால் நின்று தவம் செய்யும் காட்சி, எலிகள் பணிந்து நிற்றல் போன்ற சிற்பங்கள் காண்பார்க்கு இன்பமூட்டுவனவாகும். யானைச் சிலை, சிங்கச் சிலை என்பன தனித்தனிப் பாறையில் செய்யப்பட்டவை. பல்லவர்களில் சிறந்த சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் என்பவர்களின் சிலைகளும், அரசமாதேவியார் சிலைகளும் மாமல்லபுரத்தில் காணலாம்.

பல்லவர்கள் பெருமையை இன்று நமக்கு எடுத்துக் காட்டுவன அச்சிற்பங்களே. அவை களை ஒவ்வொருவரும் சென்று காணவேண்டும். ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழர் எத்தகைய நுண்ணறிவும் கைத்தொழில் திறனும் பெற்றிருந்தனர் என்பதும் இதனால் தெரிகின்றது.

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| தலைநகர் | பேரூர் | பொலிவு |
| துறைமுகப்பட்டினம் | கேட்பாரற்ற | மார்க்கம் |
| பல்லவர் | சீர்குலைந்தநிலை | சிற்பங்கள் |
| அரசமாதேவியார் | செதுக்கல் | இலக்கியம் |

**வினாக்கள்**

1. மாமல்லபுரத்திற்கு இக்காலத்தில் வழங்கும் பெயர் யாது?
2. பல்லவர்களில் எம்மூவர் காலம் சிறந்த காலம்?
3. மாமல்லபுரத்தில் காணத்தக்கன எவை?
4. மாமல்லபுரத்திற்கு வேறு பெயர்கள் எவை?

**கட்டுரைப் பயிற்சி**

1. நீ மகாபலிபுரத்தைப் பார்த்து வந்ததாக நினைத்துக்கொள். மகாபலிபுரத்திலுள்ள சிற்பங்களைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

இராமன், இந்திரன், முருகன், சீதை, குபேரன் — இவை பெயர்ச்சொற்கள். இவை மனிதர், தேவர் என்பவர்களைக் குறிக்கும்.

பசு, எருமை, கோழி, யானை, மீன், புலி, புறா:—இவை பெயர்ச் சொற்கள். இவை உயிருள்ள [மிருகம் பறவை] பிராணிகளைக் குறிக்கின்றன.

மக்கள், தேவர் என்பன உயர்வுடைய இனம். ஆதலால் உயர்திணை என்பர்.

மற்ற உயிருள்ள மிருகம், பறவை முதலியனவும், உயிரில்லாதனவும் உயர்வு அல்லாத இனம் ஆதலால் அஃறிணை என்பர்.

எனவே, பெயர்ச் சொற்களை உயர்திணை அஃறிணை என இருவகையாகப் பிரிக்கலாம்: திணை – பிரிவு அல் + திணை = அஃறிணை.

## 11. முகம்மது நபி

அரேபியா, வெப்பம் மிக்க பாலைவன நாடு. அங்கு மக்கள் கூட்டங் கூட்டமாய், ஊர் ஊராய்த் திரிந்துகொண்டே இருப்பார்கள். அவர்கள் பாலைவனங்களை ஒட்டகங்களின் துணையால் கடப்பார்கள். அரேபியாவில் ஆங் காங்குச் சில கிராமங்களும் நகரங்களும் உண்டு. இஸ்லாம் மதம் பரவுவதற்கு முன் அரேபியா மக்கள் நட்சத்திரங்களையும், உருவச் சிலைகளை யும் வணங்கி வந்தார்கள்.

கி. பி. 571 - ஆம் ஆண்டு இஸ்லாம் மதத்தை நிலைநாட்டிய முகம்மது நபி அவதரித்தார். அவ ரது தந்தையார் அப்துல்லா என்பவர் ஆவர். தாய் அமீனு என்னும் பெயருடையார். முகம்மதின் இளமைப் பருவத்திலேயே தாயும் தந்தையும் இறந்தனர். முகம்மதை அவரது பெரிய தந்தை யாரான அபூதாலிபு என்பவர் வளர்த்து வந்தார். முகம்மது புத்தி நுட்பம் வாய்ந்தவர். அபூதா லிபு முகம்மதை வாணிகத் துறையில் நன்கு பழக்கி வைத்தார்.

முகம்மதுக்கு வயது இருபத்தைந்து ஆயிற்று. அவர் மக்கா நகரத்திலிருந்த கதீஜா என்பவரிடம் வேலைக்கு அமர்ந்தார். கதீஜா மிக்க செல்வம் படைத்த ஓர் அம்மையார். முகம்மது அவரிடம் மிக்க அன்புடன் உழைத்தார். அவருடைய அன் பையும் ஊழியத்தையும் கண்டு அச்செல்வ அம் மையார் அவரை மணந்து கொண்டார். முகம்மது பதினைந்து வருடகாலம் உலக மக்களுக்கு நன் மார்க்கங்களைப் போதிக்க ஆலோசனை செய்து வந்தார். மக்காவின் அருகில் ஹிரா என்ற

ஒரு மலைக்குகை உண்டு. முகம்மது அங்குச் சென்று பல கடுமையான நோன்புகளை நோற்றூர். அதன் பயனுய் அவர்களுக்கு இறுதியில் ஞானம் உண்டாயிற்று. அவருடைய உண்மை ஞானத்தைக் கண்ட அவரது மனைவியும் வேலைக்காரரில் ஒருவரும் அவருக்குச் சீடர்கள் ஆயினர். முகம்மது கி. பி. 610-ம் ஆண்டில் தமது கொள்கைகளை மக்களிடைப் பரப்ப எண்ணினுர்.

இங்நிலையில் அவருடைய பெரிய தந்தையார் மகனுன அலி என்பவரும், மக்கா நகரத்துச் செல்வரான அபூபக்கர் என்பவரும் முகம்மதுவுக்குச் சீடராயினர். அபூபக்கர் மிகுந்த செல்வாக்கு உடையவர். அதனுல் அவர் விருப்பத்திற்கு இணங்கிப் பல்லோர் முகம்மதைத் தம் குருவாகக் கொண்டனர். முகம்மது மூன்று வருஷகாலம் தம் மதத்தை மிக இரகசியமாகவே பரப்பி வந்தார். முகம்மது தக்க சமயமும் துணையும் கிடைத்ததும் தம் மதத்தை மக்களிடை வெளிப்படையாகப் பரப்பினர். முகம்மது அழகிய வடிவுடையவர். நுட்பமான அறிவுடையவர்; பிறரைக் கவரத்தக்க இனிய சொற்களை உடையவர். அதனுல் மக்களில் பலர் அவரைப் பின்பற்றினர். அவர் மக்களிடத்தில் காணப்பட்ட பழங்கொள்கைகளையும், உருவவழிபாட்டையும் பலமாகக் கண்டித்தார். அதனுல் அவருக்குப் பகைவர் பலர் ஏற்பட்டனர்.

குறைஷி என்னும் சாதியார் முகம்மதிற்கும் அவர் சீடர்களுக்கும் பல துன்பங்களை விளைவித்தனர். சீடர்களில் பலர் ஊரைவிட்டுச் செல்லவும் நேர்ந்தது. முகம்மதின் பெரிய தந்தையாரும் அவர் மனைவியும் இறந்தனர். குறைஷி சாதியார்

விளைவித்த துன்பமோ பொறுக்க முடியவில்லை. மக்காவிற்கு வடக்கே மதீனு என்றெரு நகர் உண்டு. அம்மதீனுவில் வசித்தவர்கள் முகம் மதின் கொள்கைகளை ஆதரித்தனர். அவர்கள் முகம்மதைக் காப்பாற்றுவதாக உறுதிமொழி கூறினர். அதனுல் முகம்மது சில நண்பர்களுடன் மதீனுவுக்குச் சென்றுர்.

கி. பி. 632-ம் ஆண்டு மதீனு நகர மக்கள் தம் ஊர் புகுந்த முகம்மதை ஊர்வலமாக அழைத் துச் சென்றனர். முகம்மது மக்காவிலிருந்து மதீனு சென்றதை முகம்மதியர்கள் ஹிஜரத் என்று கொண்டாடுகின்றனர்.

குறைஷி சாதியார் முகம்மதை அங்கும் விட வில்லை. அவர்கள் படையெடுத்துச் சென்றனர். ஆனுல் முகம்மதிற்குத் தகுந்த ஆதரவு மதீனு வில் கிடைத்தது. அதனுல் குறைஷி சாதியார் தோற்கடிக்கப்பட்டனர். முகம்மது, யூதர் என் னும் வகுப்பினரையும் பல சிற்றரசர்களையும் வென்றுர். பின்னர் முகம்மது தம் மதத்தை எளிதில் பரப்பினுர். முகம்மது பதினுயிரம் போர் வீரர்களுடன் மக்காவிற்குள் நுழைந்தார். மக்கா வும் முகம்மதின் கைவசமாயிற்று. அரேபியர் களில் பெரும்பாலோர் முகம்மதின் மதத்தைத் தழுவினர். முகம்மது தம் மதத்தை வெளிநாடு களிலும் பரப்ப எண்ணினுர். அதற்காக அவர் தமது சீடர்களைப் பற்பல நாடுகளுக்கு அனுப்பி னுர். முகம்மது தம்முடைய அறுபத்து மூன்ரு வது வயதில் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

முகம்மது போதித்துப் பரப்பிய மதத்திற்கு இஸ்லாம் என்று பெயர். இஸ்லாம் மதத்தைத்

தழுவியோர் முகம்மதியர்கள் எனப்படுவர். இம் மதத்தைப் போதிக்கும் நூல் குர் ஆன் எனப் படும். குர்ஆன் அரபி மொழியில் எழுதப்பட்டது. இதனைப் பின்னர் பல மொழிகளிலும் மொழி பெயர்த்தனர்.

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| நல்வாழ்க்கை | கடப்பார்கள் | அவதரித்தார் |
| சான்றோர் | பெருவிருப்பம் | வாணிகத்துறை |
| பாலைவனம் | கிரகங்கள் | சீடர்கள் |
| இரகசியமாக | உருவச்சிலைகள் | ஊர்வலம் |

**வினாக்கள்**

1. அரேபியர்களைப் பற்றி அறிந்தவை யாவை?
2. முகம்மது எவ்வாண்டில் பிறந்தார்? தாய் தந்தையர் யாவர்?
3. அபூதாலிபு என்பவர் யார்?
4. 'ஹிஜரத்' என்று எதனைக் கொண்டாடுகின் றனர்.

**பயிற்சி – 1**

1. எதிர்ப்பதம் கூறு:–
நல்வாழ்க்கை, வணங்காத, இரகசியமாக, அவதரித்தார்.

2. கூட்டங் கூட்டமாய், ஊர் ஊராய், வெளிப் படையாக, ஊர்வலம், இவைகளைத் தனித்தனி வாக்கி யத்தில் அமைத்து எழுது.

3. கீழ் வருவனவற்றைச் சரியாக அமைத்து எழுது:–

1. கங்கை – மதுரை ஜில்லாவில் பாய்கிறது.
2. துங்கபத்திரை - திருநெல்வேலி ஜில்லாவில் பாய் கிறது.
3. காவேரி - இராஜ மகேந்திரத்தில் ஓடுகிறது.
4. வைகை – தஞ்சாவூர் ஜில்லாவில் ஓடுகிறது.
5. தாம்பிரவர்ணி – விஜயவாடா அருகில் ஓடுகிறது.
6. கிருஷ்ணா - காசியில் ஓடுகிறது.
7. கோதாவரி - கர்நூல் ஜில்லாவில் ஓடுகிறது.

சென்னை-600 008
139649
TB

# 12. நால்வர் நண்பினர்

ஒரு காட்டின் நடுவில் ஒரு குளம் இருந்தது. அக்குளக்கரையில் ஓர் ஆலமரம் இருந்தது. அந்த மரத்தில் ஒருகாகம் வாழ்ந்து வந்தது. குளத்தில் ஆமை ஒன்று வசித்து வந்தது. ஆலமரத்தை அடுத்திருந்த செடியின் புதரில் வளை செய்து கொண்டு ஓர் எலி வாழ்ந்து வந்தது. அக்காட்டில் வசித்து வந்த மான் ஒன்று அந்த ஆலமரத்தின் நிழலில் வந்து தங்கும். காகம், ஆமை, எலி, மான் நட்புக்கொண்டு இனிது வாழ்ந்து வந்தன. அவை ஒன்றையொன்று விட்டுப் பிரியாதிருந்தன.

ஒரு சமயம் மான் மேய்வதற்காக அடுத்த காட்டிற்குச் சென்றது. அங்குப் புல் தளதள என்று செழித்து வளர்ந்திருந்தது. மான் புல்லை நன்றாக வயிறார மேய்ந்துவிட்டு ஒரு குளிர்ந்த இடத்தில் படுத்துக்கொண்டிருந்தது. அதற்குப் பின்புறத்தில், ஓர் அரசன் தன்பரிவாரங்களோடு வந்து தங்கி இருந்தான். அவன் தன் பரிவாரங் களைப் பார்த்து, "இந்த நான்கு நாட்களாக இக் காட்டில் வேட்டை ஆடிவிட்டோம். நாம் நாளை அடுத்த காட்டிற்குச் செல்வோம். அங்கு ஓர் ஆல மரமும் குளமும் தங்குவதற்கு வசதியுள்ள இட மாக இருக்கிறது" என்றான்.

அரசன் பேசிய மொழிகளை மான் கேட்டது. அந்த மானிற்கு மனிதர் மொழி தெரியும். ஆத லால் அம்மொழியைக் கேட்ட மான் விரைந் தோடி ஆலமரத்தடிக்கு வந்தது. அதற்குள் காக மும் ஆமையும் எலியும் அங்கு வந்து சேர்ந்தன.

மான் அவைகளைப் பார்த்து, "நண்பர்களே, கேளுங்கள். நான் அடுத்த காட்டிற்கு மேயப்

போனேன். அங்கு நான் வயிறுர மேய்ந்தேன். பின் ஒரு மர நிழலில் சென்று படுத்துக்கொண்டேன். அங்கு ஓர் அரசன் தன் வேட்டைக்காரர் களோடு வந்து பின்புறத்தில் தங்கியிருந்தான். அவன் தன் வேட்டைக்காரர்களை நோக்கி, "இக் காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடி விட்டோம். நாளை அடுத்த காட்டிற்குச் செல்வோம் என்று கூறக் கேட்டேன்", என்றது.



அவர்கள் வருவதற்குள் அந்நான்கும் அக் காட்டை விட்டு நீங்குவதெனத் தீர்மானித்தன. அக்காட்டிற்கு வடக்கே ஒரு காடு இருப்பதாக வும், அங்குச் சென்ருல் யாதொரு துன்பமும் இல் லாமல் இனிது வாழலாம் எனவும் காகம் சொல்ல மற்றவை ஒப்புக்கொண்டன. யாவும் மறுநாள் அதிகாலையில் புறப்பட்டன. ஆமை மெல்ல மெல்ல நகர்ந்து சென்றது. மானும் எலியும் அத ணுேடு சென்றன. காகம் மேலே மெதுவாகப்

பறந்து சென்றது. நடுப்பகல் ஆகியும் ஆமை மெல்லச் சென்றதால் ஆமை பாதி தூரமே செல்ல முடிந்தது.

அப்பொழுது வானில் பறந்து சென்ற காகம் கையில் வில்லும் அம்பும் தாங்கி எதிரில் சிறிது தூரத்தில் வரும் வேடனைக் கண்டது. அது மற்ற நண்பர்களுக்கும் வேடன் வருவதைப் பற்றிக்கூறியது. நடுவழி ஆதலால் ஆமை தங்கக் கூடிய இடம் இல்லை.

சிறிது தூரத்தில் செடிகளின் புதரைக் கண்டது. அங்குச் செடிகளின் புதரில் மறைந்து கொள்ள எலியும், மானும், ஆமையும் சென்றன. காகம் அடுத்து நின்ற மரக்கிளையில் மறைவாக அமர்ந்தது. மான் சில செடிகளின் புதர்களுக்குள் புகுந்து ஒளிந்து கொண்டது. எலி செடிகளின் புதரினடியில் பதுங்கிக் கொண்டது. ஆமை மெள்ளப் புதர் நோக்கிச் சென்றது.

இந்நிலையில் அவ்வேடன் அருகே வந்து விட்டான். அன்று காலைமுதல் நடுப்பகல் வரை காடு முழுவதும் சுற்றித் திரிந்தும் ஒரு மிருகமும் அவனுக்கு அகப்படவில்லை. அவன் ஆமையைப் பார்த்ததும் "இதுவேனும் கிடைத்ததே" என்று மகிழ்ந்தவனாய் அதனை எடுத்துக் கொண்டான். அவன் அதை வில் தண்டில் நாண்கயிற்றால் கட்டிக் கொண்டு தன் வழிச் செல்லலானான்.

அவன் சென்றதும் மான், காகம், எலி மூன்றும் கூடின. நண்பர் ஆமையாருக்கு நேர்ந்ததை எண்ணி வருந்தின. பின் ஆமையை விடுவிக்க என்ன செய்யலாம் என்று ஆலோசித்தன. அப்பொழுது காகம், "எனக்கு ஓர் குறுக்கு வழி தெரி

யும். இவ்வழியே செல்லும் வேடன் அங்குத்தான் வருவான். அவன் செல்லும் வழியில் ஒரு குளம் இருக்கிறது. அக்குளத்தை நாம் குறுக்கு வழியில் சென்ருல் விரைவில் அடையலாம். அங்கே மான், குளக்கரையில் இறந்ததுபோல் கிடக்கவேண்டும். நான் அதன் கண்ணைக் கொத்துவது போல் பாசாங்கு செய்வேன். எலி அதன் பக்கத்தில் சிறு செடிகளிருக்குமிடத்தில் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். வேடன் அப்பக்கம் வருவான். தொலை



வில் வரும்போதே மானைக் கண்டு கொள்வான். நான் கொத்துவதால், மான் செத்து விட்டது என்று எண்ணி, வில்லைக் கீழே வைத்துவிட்டு, அதன் கால்களைக் கட்டவருவான். அப்பொழுது எலி விரைந்து வந்து வில் கட்டினைக் கடித்து ஆமையை விடுவிக்க வேண்டும்; ‘காகா’ என்று நான் கத்திக் கொண்டு பறந்து செல்வேன். உடனே மான் எழுந்து ஓட்டம் பிடிக்கவேண்டும். நான் பறந்து விடுவேன். எலி செடிப் புதர்க்குள்

ஒளிந்து கொள்ளும். ஆமைநீர்க்குள் போய்விடும்'' என்றது. அவைகளும் நண்பனை விடுவிக்க கருதி ஒப்புக் கொண்டு குறுக்கு வழியே சென்றன.

காகம் சொன்னபடியே மான் இறந்ததுபோல் கிடந்தது. காகம் அதன் கண்ணைக் கொத்திக் கொண்டிருந்தது. எலி தயாராக இருந்தது. வேடனும் அவ்வழியே வந்தான். தூரத்தில் வரும் பொழுதே மான் படுத்துக் கிடத்தலைப் பார்த்தான். அவன் ஆவலோடு விரைந்து வந்தான். காகம் கொத்துவதால் மான் இறந்துவிட்டது என்று எண்ணினான். இவன் செடியருகில் ஆமையைக் கட்டிய வில்லை வைத்துவிட்டுக் கயிற்றால் மானின் கால்களைக் கட்டச் சென்றான். எலி விரைந்து சென்று பற்களால் வில்லின் நாண் கயிற்றைக் கடித்து ஆமையை விடுவித்தது. வேடன் நெருங்குதலைக் கண்டு காகம் 'கா கா' என்று கத்திக் கொண்டு பறந்து சென்றது. மான் எழுந்து ஓட்டம் பிடித்தது. கையில் வில் இல்லாததால் வேடன் அம்பெய்ய முடியவில்லை. ஆமை நீர்க்குள்ளும், எலி புதரிலும் சென்று ஒளிந்து கொண்டன. வேடன் வந்து வில்லைப் பார்க்க நாண்கயிறு அறுந்து கிடந்தது. ஆமையைக் காணவில்லை. 'வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பையும் இழந்தவன் போல்' வேடன் வருந்தினான். அதன் பின் நான்கும் ஒன்று சேர்ந்து வேறொரு காட்டில் இன்பமாய் வசித்தன.

அருஞ் பதங்கள்

| | | |
|---|---|---|
| அடுத்திருந்த | சுற்றித்திரிந்து | வாய்த்தவிடு |
| பரிவாரம் | அகப்பட்ட | இழந்தவன் |
| வசதி | குறுக்கு வழி | தயாராக |
| விரைக்க | விடுவிக்க | விரைவு |
| மெல்ல | நெருங்குதல் | தண்டு |
| வாட்டம் | வேட்டைக்காரன் | நடுப்பகல் |

வினாக்கள்

1. மேயச் சென்ற மான் கேள்விப்பட்டது என்ன?
2. நான்கும் யாது செய்தன?
3. ஆமையை விடுவிக்க மூன்றும் செய்த தந்திரம் என்ன?
4. 'வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பையும் இழந்தவன் போல்' — இதை விளக்கு.

கட்டுரைப் பயிற்சி

1. ஒற்றுமையும் உதவி செய்தலும் — என்பது பற்றிப் பத்துவரிகள் எழுது.

பயிற்சி — 1

கீழ் வருவனவற்றைப் படி:

1. இராமன், கந்தன் வேலன்.
   ஆணைக் குறிக்கின்றன – ஆண்பால்.
2. சீதை, வள்ளி, தமயந்தி,
   பெண்ணைக் குறிக்கின்றன – பெண்பால்.
3. மக்கள், குழந்தைகள், மகளிர், மாணவர்.
   ஆண் பெண் ஆன பலரையும் குறிக்கின்றன—
   பலர் பால் (உயர்திணை)
4. பசு, நாய், கோழி, மேசை படம்.
   ஒன்றைக் குறிக்கின்றன ஒன்றன்பால்.
5. பசுக்கள், நாய்கள், கோழிகள், மேஜைகள், படங்கள் – பலவற்றைக் குறிக்கின்றன – பலவின் பால்.

# 13. தேனீ

தேன் இனிமையான பொருள். அதுநோயை நீக்க மருந்துக்குப் பயன்படும்.

மலர்களில் 'நெக்டார்' எனப்படும் அமிர்தம் இருக்கிறது. அது மது என்ற பெயராலும் அழைக்கப்படும். தேனீக்கள் தம் நீண்ட உறிஞ்சுக் குழாய் உறுப்பினால் அந்த மதுவைப் பருகுகின்றன. அந்த அமிர்தத்தைத் தேனீக்கள் தேன்பைகளில் சேர்க்கின்றன.அங்கு அது தேனாக மாறுகிறது. அதனைத் தேன் கூட்டிலுள்ள அறைகளில் வைக்கின்றன. தேனீக்களில் நான்கு வகை உண்டு. அவை மலைத் தேனீ, அடுக்குத் தேனீ, கொம்புத் தேனீ, கொசுத் தேனீ என்பன.



மலைத்தேனீ என்பது மிகப் பெரியது. இது அதிகமான தேனைச் சேர்க்கக்கூடியது. இதனால் கட்டப்படும் தேன்கூடு, ஐந்தடி நீளமும் ஐந்தடி அகலமுமுள்ளதாகும். மலைத்தேனீ கவிந்தபாறைகளிலும் பெரிய மரங்களின் கிளைகளிலும், நீண்ட சுவர்களிலும் கூட்டைக் கட்டும். இத் தேனீயின் அருகில் செல்லமுடியாது. தேனீக்களுக்கு நஞ்சுள்ள கொடுக்குகள் உண்டு. அதனால் கொட்டித் தனக்குத் துன்பம் செய்பவர்களைத் துரத்தும். இது மிக்க தூரமான இடங்களுக்கும் பறந்து செல்லும். இதனால் சேர்க்கப்படும் தேன் கூட்டில் தேன் அதிகமாக இருக்கும். இத்தகைய தேனீ இந்தியாவிலும் இலங்கையிலும் அதிகம்.

நம் நாட்டில் எங்கும் காணப்படுவது அடுக்குத்தேனீ. இது தேன்கூட்டைக் கட்டும்பொழுது அடுக்கடுக்காய்ச் சம தூரத்தில் கட்டும். இது இருள் நிறைந்த மரப்பொந்துகளிலும், பாறை இடுக்குகளிலும், வீட்டுக் கொல்லைகளிலுள்ள மரங்கள், பெட்டிகள் முதலியவற்றிலும் கூடுகட்டும். மலைத் தேனீயைவிட இது மிகவும் சாதுவானது. இதன் கூட்டிலிருந்து ஆண்டு ஒன்றிற்குப் பத்துப் பன்னிரண்டு இராத்தல் தேன் எடுக்கலாம். தேனீக்களை வளர்த்துத் தேன் எடுப்போர் இந்த அடுக்குத் தேனீக்களையே வளர்க்கின்றனர்.

கொம்புத் தேனீ உருவத்திற் சிறியது. இது கட்டும் கூட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று அவன்சு தேன் தான் கிடைக்கும். இது பெரிய கட்டிடங்களிலும், வீட்டுக்கூரை மூலைகளிலும் கூடுகட்டும்.

கொசுத்தேனீ முன்சொன்ன மூவகைத் தேனீக்களிலும் சிறியது; கொசுவைப் போன்றது. இது மெழுகினால் தேன்கூட்டைக் கட்டுவதில்லை. மரப் பிசினால் மரப்பொந்துகளிலும், சுவரின் சந்துகளிலும் கூட்டைக் கட்டும். இப்பிசின் வார்னிசுகளுக்குப் பயன்படும். இது சேர்க்கும் தேன் மருந்துகளுக்குப் பயன்படுகிறது.

தேனீக்கள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து வாழும். ஒரு தேன் கூட்டில் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் தேனீக்கள் இருக்கும் என்றால் அது ஓர் ஆச்சரியம் அல்லவா! ஒரு தேன் கூட்டில் இராணி ஈ, உழைப்பாளி ஈ, ஆண் ஈ என மூன்று வகையுண்டு. ஒருகூட்டில் உழைப்பாளித் தேனீக்

களே அதிகமாக இருக்கும். உழைப்பாளித் தேனீக்கள் தம் அடிவயிற்றிலுள்ள பைகளிலிருந்து கிடைக்கும் மெழுகைக் கொண்டு கூட்டை அமைக்கின்றன. அவையே தேனைச் சேகரிக்கின்றன. இராணித்தேனீ இடும் முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்களுக்கு உணவு கொடுத்துக் காப்பதும் உழைப்பாளித் தேனீக்களே.

தேன் கூட்டத்திற்குத் தேனடை என்ற பெயரும் உண்டு. தேன்கூடு பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். அதில் ஆயிரக்கணக்கான அறுகோண அறைகள் உண்டு. பெரிய அறைகளில்



ஆண் ஈக்கள் இருக்கும். அவை சோம்பேறி ஈக்கள். சிறிய அறைகளில் உழைப்பாளித் தேனீக்கள் இருக்கும். ஒவ்வோர் அறையில் பெண் ஈக்கள் அதிகமாக இருக்கும். ஆனால் அவை முட்டையிடா. இராணி ஈயே முட்டையிடும். அது தடவைக்கு இரண்டாயிரத்துக்கு மேல் முட்டையிடும். பெண் ஈக்கள் தேன் கூட்டின் மீது மொய்த்துக் கொண்டும் சுற்றிப் பறந்து கொண்டும் இருக்கும்.

ஒருகூட்டில் ஆணீக்களின் தொகை கொஞ்சமே. அவை சோம்பேறி ஈக்கள். அவை ஒரு வேலையும் செய்வதில்லை. ஆண் ஈக்களுக்குக் கொடுக்குகள் இல்லை. ஜனவரி மாதம் முதல்

ஆகஸ்டு மாதம் முடியத் தேன் எடுப்பதற்குத் தகுதியான காலம் ஆகும். அதனைத் தேன்பெருகு காலம் என்று கூறலாம். நம் நாட்டில் தேன் எடுக்கும் முறை சிறந்ததன்று. தீப்பந்தங்கள் கொண்டு பொசுக்கும் காலத்தில் ஈக்கள் பல இறக்கும். தேனடையைப் பிழியும் பொழுது புழுக்கள் பல இறந்துபோகும். இதனால் தேன் சுத்தமாயிராது.

தேனீக்களை வளர்க்கவும், அவற்றிற்குத் தீங்கு நேராதபடி தேன் எடுக்கவும், இக்காலத்தில் பல புதிய முறைகளை உபயோகிக்கிறார்கள். அதனால் சுத்தமான தேன் கிடைக்கிறது. தேனீ வளர்த்துத் தேன் எடுத்தல் சிறந்ததோர் தொழிலாகும். அதற்குச் செலவும் குறைவு. செயற்கைத் தேன் கூட்டுப்பெட்டி ஒன்று ஐந்துரூபாய் செலவில் செய்து விடலாம். அதிலிருந்து ஆண்டுதோறும் முப்பது ரூபாய் வருமானம் கிடைக்கும்படி செய்யலாம்.



செயற்கைத்தேன் கூட்டுப் பெட்டி நாற்புறங்களிலும், மேற்பக்கமும் பலகைகளால் மூடப்பட்டதாகும். அதனுள் பல சிறு அறைகள் அமைத்துச் சட்டங்கள் தொங்கவிடப் பட்டிருக்கும். பெட்டியின் முன்புறத்தில் வட்டமான துளைகள் இருக்கும். அவைகளின் வழியாகத் தேனீக்கள் வெளியில் செல்லவும், உள்ளே வரவும் கூடும் அல்லவா?

இத்தகைய பெட்டிகளைத் தோட்டத்தில் அமைத்து ஒரு பெட்டியில் தேனீக்களைச் சேர்த்து

விட்டால், பின்னர் அவை தாமே தம் தொழிலைச் செய்ய ஆரம்பித்துவிடும். மலர்களிலிருந்து தேனைக் கொண்டுவந்து சேர்க்கும். பெட்டிகளில் சேர்க்கப்பட்ட தேனடையிலிருந்து கூட்டிற்கும் ஈக்களுக்கும் சேதம் இல்லாமல் தேனை எடுக்கக் கருவிகள் உள்ளன. இம்முறையில் எடுக்கப்படும் தேன் சுத்தமானதாகும். கிராமவாசிகள் இத் தொழிலை மேற்கொண்டால் அவர்களுக்கு வருமானம் பெருகும்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| **உறிஞ்சுக்குழாய்** | **தேன்மெழுகு** | **மரப்பிசின்** |
| **கோண அறைகள்** | **தேனடை** | **மொய்த்துக்கொண்டு** |
| **மேற்கொண்டால்** | **பொசுக்கும்** | **சேகரிக்கப்பட்ட** |

### வினாக்கள்

1. மதுவைத் தேனீக்கள் எவ்வாறு சேகரிக்கின்றன?
2. நால்வகைத் தேனீக்களைப்பற்றி 12வரிகள் எழுது.
3. உழைப்பாளித் தேனீக்களின் வேலையைப்பற்றி எழுது.
4. தேனடையைப்பற்றித் தெளிவாக எழுது.
5. தேனெடுக்கும் முறையை எழுது.

### பயிற்சி

கீழ்வருவனவற்றைப் படி:—

| (அ) | (ஆ) | |
|---|---|---|
| மரம் | — மரங்கள் | அ — பகுதியிலுள்ளவை ஒரு பொருளைக் குறிக்கின்றன. |
| பழம் | — பழங்கள் | |
| பேனு | — பேனுக்கள் | ஆ-பகுதியிலுள்ளவை இரண்டு முதலான பல பொருள்களைக் குறிக்கின்றன. |
| பசு | — பசுக்கள் | |
| புலி | — புலிகள் | |
| புத்தகம் | — புத்தகங்கள் | |
| வயல் | — வயல்கள் | ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை. இரண்டு முதலான பொருள்களைக் குறிப்பது பன்மை. |

ஒருமையும், பன்மையும் எண் என்று கூறப்படும். எண்ணிக் காட்டுவதால் எண் எனப்பட்டது.

# 14. நல்ல தீர்ப்பு

தெனலி இராமன் என்பவனைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? அவனைப்போல் மரியாதை இராமன் என்பான் ஒருவன் இருந்தான். இருபது வயதுடைய மரியாதை இராமன் ஒரு சமயம் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது நடந்த கதை ஒன்றைக் கேளுங்கள்.

மரியாதை இராமன் இருந்த ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவளுக்குப் பெரிய வீடு ஒன்று இருந்தது. அவள் ஒருத்தியே அவ்வீட்டில் வசித்து வந்தாள். அவள் அவ்வூருக்கு வருபவர்களுக்குத் தன் வீட்டில் தங்குவதற்கு இடந்தருவாள். அவர்கள் செல்லுங்காலத்தில் அவளுக்கு ஏதேனும் பொருள் கொடுத்துச் செல்வார்கள். அவள் அதனை வைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தாள்.

ஒரு சமயம் நான்கு திருடர்கள் அயலூரில் திரண்ட பொருளைக் கொள்ளை அடித்தனர். அவர்கள் வேற்றூர்க்குச் சென்று ஒரு குடம் வாங்கி வந்தனர். அக்குடத்தில் அவர்கள் கொள்ளையடித்த பணங்களையெல்லாம் போட்டு அக்குடத்தின் வாயைத் தக்கவாறு மூடிவிட்டனர். பின்னர், அவர்கள் தங்களைப் பிறர் அறியாதபடி உடுப்புக்களை உடுத்திக்கொண்டு கிழவியின் ஊருக்கு வந்தனர். அவர்கள் கிழவியின் வீட்டிற்கு வந்து அக்குடத்தை அவளிடம் கொடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கும்படி சொன்னார்கள். குடத்தைக் கொடுக்கும்போது, "அம்மையே, நாங்கள் நால்வ

ரும் வந்தால் குடத்தைக் கொடு,'' என்று கூறினர். அவ்வாறே செய்வதாகக் கிழவி வாங்கி வைத்துக் கொண்டாள்.

திருடர்கள் நால்வரும் அவ்வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நெடுந்தூரம் நடந்து வந்தவர்கள் ஆகையால் அவர்கள் மிகவும் களைத்துப்போயிருந்தனர். களை தீரக் குளிக்க விரும்பினர்கள். அங்கு ஓர் கிணறு இருந்தது. அதில் இறங்கிக் குளிக்க முடியாது. அதற்காக நால்வரில் ஒருவன் கிழவியிடம் குடம் ஒன்று வாங்கிவரச் சென்ருன். சென்றவன் கிழவியிடம் பணக் குடத்தைக்



கொடுக்கும்படி கேட்டான். அதற்குக் கிழவி, ''நால்வரும் வந்தால்தான் குடத்தைக் கொடுப்பேன்'' என்ருள். அப்பொழுது அவன், ''பாட்டி, அதோ, அங்குத்தான் மூவரும் அமர்ந்திருக்கிருர்கள். அவர்கள் தான் குடத்தை வாங்கி வரும்படி

சொன்னார்கள்; நீ வேண்டுமானாலும் வாசலில் வந்து கேள்,'' என்றான்.

கிழவி வாசலில் வந்து அங்கு நின்றபடியே, "குடத்தைக் கொடுக்கலாமா'' என்றாள். மற்றைய மூவரும் நீரிறைத்துக் குளிப்பதற்குரிய குடத்தைக் கொடுக்கலாமா'' என்றுதான் கிழவி கேட்கிறாள் என்று எண்ணி, "கொடு கொடு'' என்றனர். கிழவி பணக் குடத்தைக் கொடுத்தாள். அவன் பணக் குடத்தை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புற வழியாக நடந்துவிட்டான்.

பாத்திரத்திற்குப் போனவன் 'வருவான், வருவான்' என்று மற்றைய மூவரும் நெடுநேரம் காத்திருந்தனர். அவன் வரவில்லை. அவர்கள் மூவரும் வந்து கிழவியைக் கேட்டனர். கிழவி "நீங்கள் கூறியபடி பணக் குடத்தைக் கொடுத்து விட்டேனே'' என்றாள். அம்மூவர்க்கும் கோபம் மூண்டது. அதனால் அவர்கள் கிழவிமீது நீதிபதியிடம் வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதி இரு திறத்தாரையும் கூப்பிட்டு வழக்கை விசாரித்தார். முடிவாக அவர் கள்வர்களின் சார்பாக தீர்ப்பு அளித்தார். கிழவிக்கு உண்டான துக்கம் அளவிட முடியாதன்றோ!

தன்னை நொந்துகொண்டு துக்கத்தோடு வரும் கிழவி வழியில் மரியாதை இராமனைக் கண்டாள். அவனும் கிழவியைப் பார்த்தான். கிழவி தன் கதையைத் துன்பத்தோடு சொன்னாள். இளைஞன் மனம் உருகிவிட்டது. 'ஐயோ பாவம்! இக்கிழவிக்கு மிக்க துயரை விளைவிக்கும் இத்தீர்ப்பை அளித்த நீதிபதி தலையின்மேல் இடி விழட்டும்,'' என்று இராமன் கூறினான்.

இராமன் அவ்வாறு கூறியபோது அரசசேவகர்கள் அவன் கூறியதைக் கேட்டனர். அவர்கள் இராமனை அரசன் முன் அழைத்துச் சென்று நடந்ததைக் கூறினர். அரசன் இளைஞனை நோக்கினான்," இளைஞனே, நீ நீதிபதியாய் இருந்திருந்தால் எவ்வாறு தீர்ப்பு அளிப்பாய்? நடத்திக் காட்டு," என்றான் அரசன்.

இராமன் நீதிபதியாய் அமர்ந்தான். இரு கட்சிக்காரர்களையும் அழைத்து வரும்படி கட்டளை இட்டான். இராமன் இருதிறத்தினர் வாக்கு மூலங்களையும் கேட்டறிந்தான். உடனே, இராமன், "நால்வரும், சேர்ந்து வந்தால் கிழவி குடத்தைக் கொடுக்கவேண்டும் என்பதுதானே ஒப்பந்தம். இப்பொழுது குடத்தைக் கேட்பவர் மூவர்தானே. ஆதலால் கிழவி குடத்தைக் கொடுக்காது மறுத்தது நியாயமே. நால்வரும் சேர்ந்து வந்த பின்னர்க் குடத்தைக் கிழவி கொடுக்க வேண்டும். ஆதலால் மூவர் கிழவிமீது வழக்குத் தொடர நியாயமில்லை," என்று இராமன் விரைவாகத் தீர்ப்பளித்தான். கிழவிக்கு உண்டான மகிழ்ச்சிக்கோ அளவில்லை. கள்வர்களோ நெஞ்சங்கலங்கித் திகைப்புற்றனர்.

அசன் இராமனது நுண்மதியைக் கண்டு வியந்தான். இராமனுக்கு அரசன் பல பரிசுகளை அளித்து, மிக்க மரியாதைகளைச் செய்தான். யாவரும் இராமனின் நுண்மதியைப் போற்றினர். அரசன் இராமனுக்குப் பல மரியாதைகள் செய்தான். ஆதலின் அன்று முதல் அவனை யாவரும் மரியாதை இராமன் என்று அழைத்தனர்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| சுவையாகவும் | பத்திரமாய் | நீதிபதி |
| ஏதேனும் | நொந்து | வழக்குத் தொடர்தல் |
| அயலூர் | கட்சிக்காரர் | இடி விழட்டும் |
| இருதிறத்தார் | திகைப்புற்றனர் | நியாயம் |

### வினுக்கள்

1. திருடர்கள் கிழவிமேல் வழக்குத் தொடர்ந்த தற்குக் காரணம் என்ன?

2. கிழவியின் வார்த்தைகளைக் கேட்ட இராமன் கூறியது என்ன?

3. அரசன் கட்டளைப்படி இராமன் நீதிபதியாய் அமர்ந்து யாது செய்தான்?

4. இராமனுக்கு மரியாதை இராமன் என்று பெயர் வந்தது ஏன்?

### பயிற்சி–1

சுவையாகவும், இன்பமாகவும், ஏதேனும், செய்தி, பத்திரமாய், நொந்து, மரியாதை, திகைப்பு, சார்பாக- இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

### பயிற்சி – 2

1. அவன் குடத்தை எடுத்துக்கொண்டு பின்புற வழியாக நடந்துவிட்டான்-இவ்வாக்கியத்தின் கருத்து என்ன?

2. "ஐயோ பாவம் இக்கிழவிக்கு மிக்க துயரம் விளைவிக்கும் தீர்ப்பை அளித்த நீதிபதி தலையின்மேல் இடி விழட்டும்."– இது யார் கூறியது? எப்பொழுது? இதன் கருத்து என்ன?

# 15. மாணவர் கடமை

மாணவன் என்பான் இளமைப் பருவத்தை உடையவன். அவன் குழந்தைப் பருவம் நீங்கிப் பல செய்திகளை அறியக்கூடிய நிலையை அடைகிறான். ஆதலால் இளமைப்பருவம் மானிட வாழ்க்கையில் மிகவும் அக்கரையோடு காக்க வேண்டிய பருவம். இளமைப் பருவத்தில் பெறும் பழக்க வழக்கங்களே பிற்காலத்தில் அவன் வாழ்க்கையில் காணலாம்.

சிறுவர்களே ஒரு நாட்டின் வருங்கால மக்கள். ஆதலால் சிறுவர்கள் நாட்டின் செல்வம். எனவே, சிறுவர்கள் செந்நெறியில் ஒழுகி மேன்மை எய்தினார்களாயின் நாடு செம்மையான நிலையில் மேன்மை அடையும். ஆகையால் சிறுவர்களின் பாதுகாப்பைப் பெற்றோரும், அரசாங்கத்தாரும் மிகக் கவலையோடு கவனித்தல் வேண்டும். சிறுவர்களுக்குக் குடும்பத் தொல்லைகள் இல்லை; செல்வத்தைத் தேடவேண்டும் என்ற கவலையுமில்லை. மாசு மறுவற்ற அவர்கள் மனம் தூய்மையுடையது. மை ஒற்றும் காகிதம் போல் எதனையும் பற்ற வல்லது.

சிறுவர்களுக்கு நல்லுடல், நல்லொழுக்கம், நற்கல்வி என்பவை அளிக்கப்பட வேண்டும். அறிவு, ஆற்றல், ஒழுக்கம் என்பன மூன்றும் அவர்களிடத்தில் நிறைந்திருக்க வேண்டும். அவர்கள் மனம் தூய்மையை இழத்தல் ஆகாது. அவர்கள் நா பொய் என்னும் மாசினால் நலங் கெடலாகாது. அவர்கள் செயல் தன்னலங் கரு

தாததாகவும், தீநெறியில் செல்லாததாகவும் இருக்கவேண்டும். அவர்கள் உள்ளம் உயர்ந்த கருத்துக்களையே உள்ளுதல் வேண்டும். அவர்கள் உடல் உரம் பெற்றுத் திகழவேண்டும். அவர்கள் அறிவு வயிரமணி போலவும் தீச்சுடர் போலவும் ஒளி வீசித் திகழவேண்டும். இத் தகைய இளஞ் சிறுவர்களைப் பெற்ற நாடு அன்றோ மேன்மையுற்று விளங்கும்; அழியாப் புகழ் எய்தும்; அளவிலாக் கலைவளம் கண்டு களிக்கும்.

மாணவனிடம் கல்வியில் விருப்பு, பேருழைப்பு, சோம்பல் இல்லாமை, சகிப்புத் தன்மை, பொறுமை, உள்ளத் தூய்மை முதலியன நிறைந்திருத்தல் வேண்டும். இறைவனால் அளிக்கப்பட்ட செல்வம் பகுத்தறிவு. அதனைக் கல்வியால் பின்னும் ஒளிபெறச் செய்யலாம். மாணவர்கள் தம் ஆசிரியரிடம் கற்ற கல்வியாலும் பகுத்தறிவாலும் ஆராய்ந்து நல்லனவற்றைக் கொண்டு தீயனவற்றை நீக்கி விடுதல் வேண்டும். கல்வியை ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் குற்றம் இல்லாது கற்கவேண்டும்.

மாணவர்கள் தாய்மொழியிடத்தும், தாய் நாட்டினிடத்தும் பற்றுடையவர்களாய்த் திகழ வேண்டும். தாய்மொழியைப் பழுதறக் கற்ற பின்னரே பிறமொழிகளைக் கற்க முயலவேண்டும். பேசும் காலத்தில் கொச்சை இல்லாமல் திருத்தமாகவும் குற்றமில்லாமலும் பேசவேண்டும். மற்றும் பேசும் பொழுது ஆராய்ந்து அளவோடு பேசவேண்டும். வீண் வார்த்தைகள் பேசக்

கூடாது. திருவள்ளுவர் நாவடக்கம், சொல் வன்மை என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறு கிருர். எவரிடத்துப் பேசினுலும் பணிவாகவும் தாழ்மையாகவும் பேசவேண்டும். 'கீழோராயினும் தாழ உரை' என்பது ஔவையார் மொழி.

மாணவர்கள் உடல் நலம் பெற்றுத் திகழ வேண்டுவது இன்றியமையாதது. அவர்கள் உடல் நலமுடன் வாழச் சுகாதார நெறிகளைக் கைப்பற்றி ஒழுகவேண்டும். உடற்பயிற்சியை மாணவர்கள் செய்து வரவேண்டும். நல்ல உணவும், உடற் பயிற்சியும் தூய நடத்தையுமே ஒழுக்கமுள்ள மாணவர்களாகத் திகழும்படி செய்ய வல்லவை.

மாணவர்களுக்குத் தெய்வபக்தி இருக்க வேண்டும். தினமும் காலையிலும் மாலையிலும் தூய உள்ளத்தோடு இறைவனைத் தியானம் செய்யவேண்டும். அதனுல் இறைவன் அருள் கிடைக்கும். 'தெய்வம் இகழேல்' என்பது முன்னோர் பழமொழி.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | எய்தினர் | ஏடும் கையுமாய் |
| சுகாதார நெறி | மாண்பு | அடிப்படை |
| செந்நெறி | தூய்மை | மை ஒற்றும் காகிதம் |
| தன்னலம் | வயிரமணி | பேரார்வம் |
| உடற் பயிற்சி | சகிப்புத்தன்மை | இன்றியமையாதது |

## வினாக்கள்

1. மானிட வாழ்க்கையில் அக்கரையோடு கவனிக்க வேண்டிய பருவம் எது? ஏன்?
2. சிறுவர்கள் – நாட்டின் செல்வம் என்பதை விளக்கு.
3. 'மை ஒற்றும் காகிதம் போல்'–எது குறித்து வந்தது?
4. மாணவர்களிடம் இருக்கவேண்டிய குணங்களும் செயல்களும் யாவை?

## கட்டுரைப் பயிற்சி

மாணவர்களும் தேகப் பயிற்சியும் என்பது பற்றிப் பத்துவரிகள் எழுது.

## பயிற்சி – 1

கீழ் வருவனவற்றைப் படி.

நான், யான், — தன்மையிடம், ஒருமை எண்.

நாம், யாம், நாங்கள், யாங்கள் — தன்மையிடம், பன்மை எண்.

நீ — முன்னிலையிடம், ஒருமை எண்.

நீர், நீவிர், நீயிர், நீங்கள் — முன்னிலையிடம் பன்மை எண்.

அவன், அவள், அது — படர்க்கையிடம், ஒருமை எண்.

அவர்கள், அவைகள், அவர், அவை — படர்க்கையிடம், பன்மை எண்.

தன்மை — பேசுகிறவன்.
முன்னிலை — கேட்போன்.
படர்க்கை — பேசப்படுவோன்.

# 16. பாப்பா – பாட்டு

1. பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

2. துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வமுண்டு - துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

3. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங் குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

4. தமிழ்த் திரு நாடு தன்னைப்பெற்ற – எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

5. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம் - அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

6. வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய் – இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

7. உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமை யடி பாப்பா.

தேசிய கவி சி. சுப்பிரமணிய பாரதியார்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| என்றும் | தேம்பி | வயிரம் |
| புறஞ் சொல் | போராடு | முறைமை |
| தேசம் | சோர்ந்துவிடல் | ஆன்றோர்கள் |

### வினாக்கள்

1. யார் நமக்குத் துணை? அதனால் நன்மை என்ன?
2. எதனைத் தட்டக்கூடாது?
3. எதனைத் தாயென்று கும்பிடவேண்டும்?
4. எச்சொல் எதனினும் உயர்ந்தது?
5. இந்திய நாட்டின் எல்லைகள் யாவை?
6. நமக்கு வேண்டுவன யாவை?

### பயிற்சி – 1

கவனித்துப் படி:

| (அ) | (ஆ) |
|---|---|
| கரடி | காடு |
| கம்பு | காதம் |

அ – பகுதியிலுள்ள முதல் எழுத்து உயிர்மெய்க் குறில்.

ஆ – பகுதியிலுள்ள முதல் எழுத்து உயிர்மெய் நெடில்.

(1) மெய் எழுத்துக்கள் பதினெட்டு; உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு — இவற்றை எழுதிக் காட்டு. பதினெட்டு மெய்யின் மீதும் பன்னிரண்டு உயிரும் தனித்தனி ஏறினால் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாகும்.

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ — இவைபோல் பிறவும்.

(2) உயிர்மெய் எழுத்துக்களை எழுது: குறில், நெடில்களைக் கண்டுபிடி.

# 17. கலிங்கம் வென்ற காவலன்

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்பன இருந்தன என்று நீங்கள் அறிவீர்கள் அன்றோ? அவற்றுள் சோழநாடு இராச ராச சோழன் காலம் முதல் மிகச் சிறப்புற்று விளங்கியது. இராச ராச சோழன் காலத்திலும் அவன் மகன் இராசேந்திரன் காலத்திலும் சோழநாடு விரிவடைந்து, சீரும் சிறப்பும் பெறுவதாயிற்று. வட நாட்டரசர்களையும் வணக்கும் வன்மை இராசேந்திரனுக்கு உண்டாயிற்று. இராசேந்திரனுக்குப்பின் அவனுடைய மக்கள் மூவர் முறையே சோழ மன்னராய் அமர்ந்து அரசாண்டனர். அவர்களுக்குப்பின் அவர்களுடைய சகோதரியின் மகனும், இராஜேந்திரனது பெண் வயிற்றுப் பேரனுமான முதற் குலோத்துங்கன் சோழ நாட்டிற்கு அரசன் ஆனான்.

முதற் குலோத்துங்கனின் தந்தை வேங்கி நாட்டுச் சாளுக்கிய மன்னனான இராச ராசன். ஆதலால், கோதாவரி யாறு வரையிலும் முதற் குலோத்துங்கன் ஆட்சி நடைபெற்று வந்தது. கோதாவரி யாற்றிற்கு அப்பாலுள்ள வடகலிங்க நாட்டு மன்னனும் சோழனுக்குக் கப்பம் கட்டி வந்தான். குலோத்துங்க சோழன் வாணிகத்தைப் பெருக்கினான். நாட்டில் சுங்கத்தை நீக்கினான். அதனால் அவனுக்குச் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்ற பெயர் உண்டாயிற்று. குலோத்துங்கன் சிறந்த பக்தன். அவன் சிதம்பரத்திலிருக்கும் நடராசப் பெருமானைக் குலதெய்வமாகத் தொழுது வந்தான்.

கங்கை கொண்ட சோழபுரம், சோழநாட்டிற்குத் தலைநகரம். சோழ நாட்டின் வடபகுதிக்குக் காஞ்சிபுரம் தலைநகரமாகும். காஞ்சிபுரம் மிகப் பழமையான காலம் முதல் சீரும் சிறப்பும் பெற்றது. காஞ்சிபுரத்தில் குலோத்துங்கன் பொன்மாளிகை ஒன்று அழகுற அமைத்திருந்தான். ஒரு சமயம் குலோத்துங்கன் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகையில் வந்து தங்கியிருந்தான். அப்பொழுது குலோத்துங்கனைச் சிற்றரசர் பலர் தத்தம் திறைப் பொருள்களுடன் வந்து பணிந்து கண்டனர். அப்பொழுது குலோத்துங்கன்,



"திறைகொடாத மன்னர் எவரேனும் உள்ளாரோ?" என்று கேட்டான். அந்நிலையில் கணக்கன் எழுந்து பணிந்து, "மன்னர் மன்ன, வடகலிங்க நாட்டு அரசனான அனந்த பன்ம சோடகங்கன் என்பான் சில ஆண்டுகளாகக் கப்பம் கட்டவில்லை" என்றான். குலோத்துங்கன் கண்கள் சிவந்தன. மன்னன் சேனைத் தலைவனைக்

கூப்பிட்டுப் போருக்குச் செல்லச் சேனைகளைத் திரட்டச் சொன்னான்.

வண்டை நகருக்குத் தலைவனும் சோழர் பெரும் படைக்குத் தலைவனுமான கருணாகரத் தொண்டைமான் எழுந்து குலோத்துங்கனைப் பணிந்து, "அடியேன் சென்று அக்கலிங்க மன்னனைச் சிறை பிடித்து வருவேன். கட்டளை பிறக்க வேண்டும்." என்று வேண்டி நின்றான். குலோத்துங்கனும் "அவ்வாறே செய்க" எனக் கட்டளையிட்டான். கருணாகரன் போருக்குக் கிளம்பினன். படைகள் வடபெண்ணை, மண்ணாறு, குன்றியாறு, கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளைக் கடந்து கலிங்க நாட்டிற்குள் புகுந்தன.

சோழன் படைகள் திரண்டு வந்ததை அனந்த பன்மன் அறிந்தான். அவனுக்கும் வீர உணர்ச்சி தோன்றியது; சோழன் படைகளை எதிர்த்துப் போராடத் துணிந்து படைகளைத் திரட்டினான். அந்நிலையில் அவனுடைய மந்திரியான எங்கராயன் என்பவன் கலிங்க மன்னனைப் பணிந்து நின்றனன். நின்று, 'மன்ன, சொல்லும் உறுதி மொழிகளைக் கேட்பாயாக. சோழ மன்னனை வெல்லுவது எளிதன்று. அவன் சேர பாண்டியர்களை வெற்றி கொண்டவன் அல்லவோ? அவனை எதிர்ப்பது முடியுமோ? ஆதலால், அம்மன்னனுக்குரிய திறையை அளித்துப் போரை ஒழிப்பதே செய்யத்தக்கது,"என்றான்.

அனந்த பன்மனோ அமைச்சனின் நல்லுரைகளைக் கேட்கவில்லை. அவன் போருக்கு எழுந்

தான். இருதிறத்தார் படைகளும் கலந்தன; போர் தொடங்கிற்று. கண்டோர் உள்ளங் கலங்கும் படி இருவர் படைகளும் தாக்கிப் போர் விளைவித் தன. கலிங்க வீரர் பட்ட பாட்டினை என்னென்று கூறுவது! கலிங்க வீரர் மனங்கலங்கி உயிர் தப்பிப்பிழைக்க, ஓடத் தொடங்கினர். மாலைப் பொழுதும் வந்தது. இருளும் அடர்ந்தது. கலிங்க மன்னன் போர்க்களம் விட்டு ஓடி ஒரு குன்றின் உச்சியை அடைந்தான்.

கலிங்க மன்னன் ஓடியதைக் கருணாகரன் படைகள் அறிந்து அவன் மறைந்திருந்த குன்றை இரவு முழுவதும் வளைந்து காத்து வந்தன; மறு நாள் பொழுது புலர்ந்ததும் கலிங்க மன்னனைச் சிறைபிடித்துக் கருணாகரன் முன் கொணர்ந்தன; கருணாகரன் சிறைப்பிடிக்கப்பட்ட கலிங்க மன்ன னோடு குலோத்துங்கனை அடைந்தான். குலோத் துங்கன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. குலோத்துங்கன் கருணாகரனுக்குத் தகுந்த பரிசு கள் அளித்துச் சிறப்பித்தான்!

இப்பெரும் போரையும் வெற்றியையும் **சயங் கொண்டார்** என்னும் புலவர் மிகவும் சிறப்பாக வும் சுவையாகவும் **கலிங்கத்துப் பரணி** என்னும் நூலில் விளங்கக் கூறியுள்ளார்.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| விரிவடைந்து | தவிர்த்த | சிறை |
| இருள் | திறை | கட்டளை |
| சுங்கம் | கணக்கன் | எளிதன்று |
| கைப்பற்றல் | வெற்றி | இயம்ப |

## வினுக்கள்

1. தமிழகத்தின் மூன்று பெருநாடுகள் எவை?
2. யார் காலத்தில் சோழ நாடு மேன்மையும் விரிவும் பெற்றது?
3. முதற் குலோத்துங்கன் யார்?
4. அனந்தபன்மனை வெல்லச் சென்றவன் யார்?
5. எங்கராயன், சோழன் வலிமையை எவ்வாறு புலப்படுத்தினுன்?
6. சயங்கொண்டார் யார்? அவர் இயற்றிய நூல் யாது? அந்நூல் எதனைப் பற்றிக் கூறுகிறது?

## பயிற்சி – 1

| | | | |
|---|---|---|---|
| அரசன் | – [பெயர்] | முதல் | வேற்றுமை |
| அரசனை | – [ ஐ ] | 2 – ம் | ,, |
| அரசனுல் | – [ ஆல் ] | 3 – ம் | ,, |
| அரசனுக்கு | – [ கு ] | 4 – ம் | ,, |
| அரசனின் | – [ இன் ] | 5 – ம் | ,, |
| அரசனது | – [அது ] | 6 – ம் | ,, |
| அரசனிடம் | – [இடம்] | 7 – ம் | ,, |
| அரசனே | – [விளி ] | 8 – ம் | ,, |

பெயர்ச் சொல்லின் பொருளை வேறு படுத்துவது வேற்றுமை. அது எத்தனை? வேற்றுமை எட்டு. பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி, என்பன வேற்றுமையைக் காட்டுகின்றன;இவை வேற்றுமை உருபுகள்.

## பயிற்சி – 2

கீழே இரு பகுதிகளாகச் சொற்கள் அமைந்துள்ளன; ஆனுல் சரியாக அமையவில்லை. பிழையாக உள்ளன; சரியாக அமைத்துக் காட்டு.

| | | | |
|---|---|---|---|
| 1. | காகம் | – நீரில் | வாழும் |
| 2. | எலி | – வனத்தில் | ,, |
| 3. | புலி | – சோலையில் | ,, |
| 4. | சிங்கம் | – வீட்டில் | ,, |
| 5. | பசு | – காட்டில் | ,, |
| 6. | யானை | – மரத்தில் | ,, |
| 7. | மீன் | - வளையில் | ,, |

# 18. தங்கம்

## [சுயசரிதை]

என் பெயர் தங்கம். என் பெயர் எவ்வளவு அழகாயிருக்கிறது! நீங்கள் மகிழ்ச்சியால் என் பெயரைச் சொல்கிறீர்கள். என்னிடம் உங்களுக்கு விருப்பம் அதிகமென்பதை நான் நன்கு அறிவேன். அதனால் அல்லவா நீங்கள் ஆணாயினும், பெண்ணாயினும் என் பெயரை வைத்துக்கொள்கிறீர்கள்; என்னை நீங்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொள்கிறீர்கள்; புகழ்ந்து போற்றுகிறீர்கள். நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குப் பெண்ணாயிருந்தால் தங்கம்மாள், பொன்னம்மாள் என்றும், ஆணாயிருந்தால் தங்கப்பன், பொன்னுசாமி என்றும் பெயரிடுகிறீர்கள்.

எனக்குப் பொன், கனகம், காஞ்சனம், சுவர்ணம், பறி என்ற வேறு பெயர்களும் உண்டு. நான் உலோகங்கள் என்னும் குலத்தில் உதித்தவன். என் இனத்தாராக வெள்ளி, இரும்பு, ஈயம் பித்தளை, செம்பு, தகரம், துத்தநாகம் முதலியோர் உள்ளனர். அவர்கள் யாவரினும் நானே சிறந்தவன். நான் எளிதிற் கிடைப்பவனும் எளிதிற் அழியக்கூடியவனும் அல்லன். என் நிறமோ அனைவர் மனத்தையும் கண்களையும் கவரும் மஞ்சள் நிறம். துரு என் இனத்தாரின் பகைவன்; அவன் என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. எனக்கு மிக்க பொறுமைக் குணம் உண்டு. என்னை நீங்கள் எவ்வளவு காய்ச்சி அடித்தாலும் பொறுத்துக் கொள்வேன்.

என்னை நீங்கள் எளிதாக எண்ணிவிடாதீர்கள். நான் உலகமெங்கும் நிறைந்திருக்கிறேன். இந்தியா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ருஷ்யா, சீனு, நியூசிலாந்து, கனடா, பிரேசில், கொலம்பியா, மெக்சிகோ, கலிபோர்னியா, ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், திபெத்து முதலான இடங்களில் நீங்கள் என்னைக் காணலாம். ஏன் அவ்வளவு தூரம்! மைசூர் நாட்டில் கோலாரில் நான் வசிக்கிறேன். என்னை எகிப்தியர், அமெரிக்காவின் முற்காலக் குடிகள் பாரசீகர், ஆப்பிரிக்கர், ஆஸ்திரேலியர் என்பார் எவ்வாறு போற்றினர் தெரியுமா? இப்பொழுதும் போற்றுகின்றனர். அவர்கள் வாழ்க்கைக்கு உயிர் நாடியாயிருப்பவன் நான்தான். நான் இல்லாத நாடும் உண்டோ? என்னை மதியாத தேசமும் உண்டோ?

என் வரலாற்றைக் கூறுவதில் என் ஆரம்ப காலத்தை என்னுல் கூற முடியவில்லை. நான் உலகத்தில் எக்காலத்தில் தோன்றினேன் என்பது எனக்கே தெரியாது. நான் ஒருவருக்கும் தெரியாமல் மலையடிவாரங்களில் ஆழமான இடங்களில் வசித்து வருகின்றேன். எனைப் பிறர் கண்டுபிடிக்கக் கூடாதென்று நான் கல்லோடும் மண்ணேடும் கலந்து ஒளிந்துகொண்டிருந்தாலும் மக்கள் எப்படியோ கண்டுபிடித்து விடுகிருர்கள்.

மக்கள் கூரிய அறிவினர். நான் மண்ணேடு கலந்து இருந்தால் நீர் ஊற்றி அரித்து எடுத்து விடுகிருர்கள். பாதரசம் என்பதை ஊற்றி

என்னைத் திரட்டிக் கொள்கிருர்கள். நானே தண்ணீரை விடப் பத்தொன்பதரை மடங்கு கனமுள்ளவன். என்னேடு என் நண்பர்களான வெள்ளி, செம்பு, என்பவர்களைச் சேர்த்துத் தகடாகவும் அடித்து விடுகின்றனர். அடிக்க அடிக்க நான் நீளுவேன். என்னை நாணய உருவங்களாகச் செய்கின்றனர். அப்பொழுது நான் பவுன், அரைப்பவுன் என்ற பெயர்களைப் பெறுகிறேன். பெண்கள் என்னிடத்தில் மிக்க அன்பு உடையவர்கள். அவர்கள் என்னைப் பல்வேறு வடிவங்களாகுமாறு செய்து தலையிலும், காதிலும், மூக்கிலும், கைகளிலும், கழுத்திலும், மார்பிலும் நகைகளாகத் தாங்கிப் போற்றுகின்றனர்.

உலகில் எனக்கு உயரிய இடம் அளிக்கப் பட்டுள்ளது. நானே என்னைப் புகழ்ந்துகொள்ள விரும்பவில்லை. என் வரலாற்றைப் பொறுமையாகக் கேட்ட உங்களுக்கு என் வணக்கம்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| ஏற்றுக்கொள் | பறி | இனத்தார் |
| போற்றுகிருர் | கனகம் | கண்ணெடுத்து |
| உதித்தவன் | சுவர்ணம் | வரலாறு |

### வினுக்கள்

1. தங்கத்திற்குரிய வேறு பெயர்களைக் கூறு.
2. உலகம், உலோகம் — பொருள் வேறுபாட்டை விளக்கு.
3. தங்கம் கிடைக்கும் நாடுகள் எவை?
4. இந்தியாவில் பொன் கிடைக்கும் இடங்கள் யாவை?

## கட்டுரைப் பயிற்சி

பொன்னின் உபயோகங்களைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

## பயிற்சி – 1

1. நான் கடைக்குப் போனேன்.

2. நான் கடைக்குப் போகிறேன்.

3. நான் கடைக்குப் போவேன்.

போனேன், போகிறேன், போவேன், என்பன வினை முற்றுக்கள்.

'போனேன்' என்பது காரியம் முடிந்ததைக் குறிக்கிறது — இறந்த காலம். 'போகிறேன்' என்பது காரியம் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கிறது – நிகழ் காலம். 'போவேன்' என்பது காரியம் இனி நடக்கப் போவதைக் குறிக்கிறது – எதிர் காலம். வினைச் சொல்லிற்கு மூன்று காலங்கள் உண்டு.

## பயிற்சி 2

மேலே காட்டியுள்ளபடி மூன்று காலங்களில் கீழ் வரும் வினைச் சொற்களை எழுது. – நில், வாசி, கேள், பார், சொல், உழு.

## 19. கிராமக் கைத்தொழில்

**மாணிக்கம் :—** சுந்தரம், இரண்டு வாரங்களாக நீ ஊரில் இல்லைபோல் இருக்கிறது! எங்கெங்குச் சென்றாய்?

**சுந்தரம்:—** மாணிக்கம், நான் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் முதலான ஊர்களுக்கும், அந்தந்த ஜில்லாக்களிலுள்ள சிற்சில கிராமங்களுக்கும் சென்றிருந்தேன்.

**மாணிக்கம்:—** நீ அங்கு என்னென்ன கண்டாய்? நீ அறிந்தவற்றையும் உன் கருத்தையும் எனக்குத் தெளிவாகச் சொல்; கேட்க விரும்புகிறேன்.

**சுந்தரம்:—** ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது. சென்னை நகரிலே அடைபட்டிருக்கும் ஒருவனுக்கு நாட்டுப் புறங்களின் வளமே தெரியாதல்லவா? இயற்கை அழகு மலிந்து இன்ப மூட்டும் நாட்டுப் புறங்களைச் சென்று காண்பது நல்லதே. அதனால் அறிவு விசாலமாகிறது.

**மாணிக்கம்:—** கிராமங்களுக்குச் சென்றிருந்தாயே. அம்மக்களைப்பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?

**சுந்தரம்:—** காந்தியடிகள் கிராம முன்னேற்றத்தை வற்புறுத்திக் கூறினார். இவர் இவ்வாறு கூறக் காரணம் என்ன என்று ஆராய்ந்













தேன். நம் நாட்டில் கிராமங்களே அதிகம். கிராமங்களே நம் நாட்டின் உயிர்நாடி. கிராமங்கள் அழிவுற்ருல் நகர மக்கள் திண்டாட வேண்டுவது தான். கிராமங்கள் ஒரு காலத்தில் இன்ப வாழ்க்கைக்கு உரிய இடங்களாக இருந்தன. ஆனல், இக்காலத்தில் கிராமங்கள் சீர்குலைந்துள்ளன. அக்கிராமங்களைச் சீர்திருத்திக் கிராம மக்களை முன்னேற்றம் அடையச் செய்தால் நம் நாடு பொன் கொழிக்கும் நன்ஞடு ஆகும் என்பது திண்ணம்.

**மாணிக்கம்:-** சுந்தரம், நீ நன்ருக ஆராய்ந்து சொல்லுகிருய். கிராமச் சீர்திருத்தம் பற்றியும் கிராம மக்களின் முன்னேற்றம் பற்றியும் நீ கொண்டிருக்கும் கருத்து என்ன?

**சுந்தரம்:-** கிராம மக்களுக்குப் பயிர்த் தொழில் வேலை ஆறுமாதங்களே. மற்ற ஆறு மாதங்கள் வேலையில்லாமையால் அவர்கள் சோம்பேறிகளாகக் காலங் கழிக்கிருர்கள்.

**மாணிக்கம்:-** சரி, பயிர்த் தொழில் இல்லாத சமயங்களில் கிராம மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிருய்?

**சுந்தரம்:-** மாணிக்கம், சொல்கிறேன் கேள். பயிர்த்தொழில் இல்லாதபோது அவர்கள் சில கைத்தொழில்களைச் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரத்தில் நூல் நூற்கலாம். துண்டுகள், துப்பட்டிகள் நெய்யலாம். ஆட்டு உரோமங்களைக் கத்தரித்துக் கம்பளங்கள் விரிப்புகள் நெய்யலாம்.

பயிர்த் தொழிலுக்குரிய கருவிகளைச் செய்ய லாம். மண் பாண்டங்களை அழகாகவும், பல விதங்களாகவும் செய்யலாம். அவற்றிற்கு வர் ணம் பூசலாம். தென்னை ஓலையால் பூக்குடலைகள் செய்யலாம். பனையோலையால் கூடை, பாய், விசிறி முதலியன செய்யலாம். தேங்காய் ஓட் டால் அகப்பை, பொத்தான் முதலியன செய்ய லாம். தென்னை நார், பனை நார், கத்தாழை நார் முதலியவற்றால் கயிறு திரிக்கலாம்.

கோரைப்பாய், ஈச்சம்பாய் முதலியன செய்ய லாம். கிராமங்களில் மூங்கில் புதர்கள் தோட் டங்களில் உள்ளன அல்லவா? மூங்கில்களால் மேசை, நாற்காலி, பெட்டி, கூடை, முறம், தடுக்கு, விசிறி முதலியன செய்யலாம். களிமண் ணலும், சிறு மரத் துண்டுகளாலும், பஞ்சு, கிழிசல் துணி முதலியவற்றாலும், பொம்மைகள் செய்யலாம். அவற்றிற்கு வர்ணங்கள் தீட்டலாம்.

மிருகங்களின் கொம்பைக் கொண்டு பொம் மைகள், சிமிழிகள், சீப்புகள், கத்திப்பிடிகள், பொத்தான்கள் முதலியன செய்யலாம். மிருகங் களின் தோலைக் கொண்டு பைகள், செருப்புகள், உறைகள் முதலியன செய்யலாம்.

மாணிக்கம், இன்னும் கேள். கிராம மக்க ளுக்கு ஊக்கமும் உழைப்பும் உற்சாகமும் இருந் தால் அவர்கள் மிக இன்பமான வாழ்க்கையை நடத்தலாம். மாடுகளை வளர்த்துப் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியன தயாரிக்கலாம். நல்ல கோழிகளை வளர்த்து முட்டைகளை விற்க

லாம். கோழிப்பண்ணை வைப்பது கிராமங்களில் எளிது. தேனீ வளர்த்துத் தேன் எடுக்கலாம்.

காய்கறித் தோட்டம், பூந்தோட்டம், பழத் தோட்டம் என்பவற்றை உண்டாக்கிக் காய்கறி, பூ, பழங்களை விற்கலாம். இவை தினந்தோறும் அவர்களுக்கு ஊதியம் தரும்.

கிராம மக்கள் தாம் செய்த பொருள்களை யும், விளைவித்த பொருள்களையும் அடுத்து இருக் கும் நகரங்களுக்குக் கொண்டு சென்று விற்க வேண்டும். இவற்றால் தினந்தோறும், வாரந் தோறும் மாதந்தோறும் வருமானம் வரக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்படும். கிராம மக்கள் சுக மாக வாழலாம். நாட்டில் பண்டங்கள் மலி யும். கிராம மக்கள் தனித்தனியாகவும் பலரு டைய கூட்டுறவைக் கொண்டும் பல தொழில் கள் செய்து முன்னேற்றம் அடையலாம்.

**மாணிக்கம்:-** இன்று பல அரிய செய்தி களைக் கேட்டேன். உல்லாசப் பிரயாணத்தில் நாட்டு நிலையை நீ நன்கு அறிந்து வந்திருக் கிறாய். நேரம் ஆயிற்று. வணக்கம் வருகிறேன்.

அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| முன்னேற்றம் | வறியவர் | சீர்திருத்தி |
| உயிர் நாடி | அழிவுற்றால் | ஏழ்மை |
| நாட்டுப்புறம் | திண்டாட | பின்பற்று |
| விலாசம் | சீர்குலைந்து | குறைகள் |
| விவசாயிகள் | துப்பட்டிகள் | மலியும் |
| விரிப்பு | வர்ணம் | பூக்குடலை |

## வினாக்கள்

1. பல ஊர்களுக்குச் சென்று வருவதால் அடையும் நன்மை என்ன?

2. நாட்டுப் புறங்களைச் சென்று காணவேண்டும். ஏன்?

3. காந்தியடிகள் கிராம முன்னேற்றத்தைப் பற்றி வற்புறுத்தக் காரணம் என்ன?

4. பயிர்த் தொழிலாளிகளின் நிலை எப்படி இருக்கிறது?

5. விவசாயிகள் என்னென்ன கைத்தொழில்களை மேற்கொள்ளலாம்?

## பயிற்சி

1. படித்த பாடம். 2. வந்து நின்றான்.

இவற்றுள் 'படித்த' 'வந்து' என்னும் வினைச் சொற்கள் பொருள் முடிவு பெறவில்லை. இவ்விதம் பொருள் முற்றுப் பெறாமல் இருக்கும் வினைச் சொற்களுக்கு எச்சம் என்று பெயர்.

'படித்த' என்னும் எச்ச வினை பாடம் 'என்னும்' பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. இவ்விதம் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்ச வினைக்குப் பெயரெச்சம் என்று பெயர்.

'வந்து' என்ற எச்சவினை 'நின்றான்' என்னும் வினையைக் கொண்டு முடிகிறது. இவ்விதம் ஒரு வினையைக் கொண்டு முடியும் எச்சவினைக்கு வினையெச்சம் என்று பெயர்.

———

# 20. கண்ணனும் குசேலரும் — I

இடம்: துவாரகையில் கண்ணன் அரண்மனை.

நேரம்: காலை நேரம்.

பாத்திரங்கள்: அரண்மனை வாயிற் காவலர்கள், குசேலர்.

**குசேலர்:—** ஐயா, ஐயா் இதனைக் கேளுங்கள்.

**முதற் காவற்காரன்:—** நீ யார்? அப்பால் போ.

**குசேலர்:—** ஐயா, இரண்டொரு சொற்கள் தயவு செய்து கேளுங்கள்.

**முதற் காவற்காரன்:–** என்ன கேட்பது? போ– அப்பால். நீ யார்?

**குசேலர்:—** முதலில் உங்கள் கேள்விக்கு விடை தருகிறேன். பிறகு நீங்கள் சொன்னபடி செய்கிறேன்.

**இரண்டாம் காவற்காரன்:—** என்ன சொல்கிறாய்? விரைவில் சொல்.

**குசேலர்:—** கண்ணனும் நானும் ஓர் ஆசிரியரிடம் படித்தோம்

**முதற் காவற்காரன்:—** சரி, சரி, அப்பொழுதே தெரியும்! புத்தி தடுமாற்றம்.

**குசேலர்:** – அப்படி ஒன்றும் இல்லை. நான் சொல்வது உண்மை. கண்ணனும் நானும் ஓர் ஆசிரியரிடம் படித்தோம். என் பெயர் குசேலன் என்பது.

**இரண்டாம் காவற்காரன்:—** (கொல் என்று சிரித்து) அது சரி, இங்கென்ன வேலை? இங்கு ஏன் வந்தாய்?

**குசேலர்:—** திரு. கண்ணனைப் பார்க்க வந்தேன்.

**முதற் காவற்காரன்:** – சரிதான். கண்ண னைப் பார்க்க வேண்டுமா? நீ கண்ணனைப் பார்க்கத் தக்கவனு? அது உன்னுல் முடியக் கூடிய காரியமா?

**குசேலர்:—**ஐயா, "குசேலன் என்பவன் உங் களைப் பார்க்க வந்திருக்கிருன். உள்ளே அனுப்ப லாமா?" என்று கேட்டு வாருங்கள். கண்ணன் எனக்கு நெருங்கிய நண்பன். உடனே அனு மதிப்பான். இதில் சந்தேகம் இல்லை. தயவு செய்து போய்க் கண்ணனிடம் என் வருகை யைச் சொல்லுங்கள்.

**முதற் காவற்காரன்:—** (வெடிபடச் சிரித்து) ஏ, கந்தை கட்டிய அந்தணனே, உனக்கு வயது முதிர்ந்து விட்டது. அதனுல் புத்தி தடுமாற்ற மடைந்தது போலும்! உம்மைச் சுற்றிப் பாரும். அரண்மனை வாயிலின் முன் எத்தனை பேர்கள் காத்திருக்கின்றனர்.! கலிங்க நாட்டுக் காவ லனைப் பார்; மகத நாட்டு மன்னனைப் பார்; கோசல நாட்டுக் கோமானைப் பார்; அவந்தி நாட்டு அரசனைப் பார்; விதர்ப்ப நாட்டு வேந் தனைப் பார்; நிடத நாட்டு நிருபனைப் பார்; பாஞ் சால நாட்டுப் பார்த்திபனைப் பார்; இவர்கள் எல் லோரும் பெரும் பொருள்களைக் கையுறையாகக் கொண்டு நெடுநாளாகக் கண்ணனைக் காணக் காத்திருக்கின்றனர். இப்பேரரசர்களாலும் காண முடியாத கண்ணனைக் கந்தை கட்டிய நீயோ காணப் போகிருய்? இது வீண் முயற்சி; பித்தன்

செய்கை எனப் பிறர் எள்ளி நகையாடுவர். மன்னரைக் காண்பாருக்குச் சிறந்த புகழ் வேண்டும்! இரு கைகளிலும் காப்பு வேண்டும்; காதில் குண்டலங்கள் வேண்டும்; விரலில் மோதிரங்கள் வேண்டும்; மார்பில் மதாணி வேண்டும்; முத்தாரங்கள் வேண்டும்; பட்டாடை வேண்டும்; பல்லக்கு வேண்டும்; மிக்க செல்வம் வேண்டும்; ஏவலாளர் வேண்டும்; இன்னும் பல வேண்டும். கேட்டனையா? உன்னால் எவ்வளவு ஆண்டுகள் காத்திருந்தாலும் கண்ணனைக் காணமுடியாது. ஆதலால், நீ வந்த வழியே மீண்டு செல்லுதல் செய்யத்தக்க செயலாகும்.

**வேறொரு காவற்காரன் :—** இப்பெரியார் மனத்தை ஏன் துன்புறுத்துகிறீர்கள்? இவர் பொய் கூறார்; இவர் கூறுவதில் உண்மை இருக்கலாம்.

**இரண்டாம் காவற்காரன்:—** ஐயா, இரும்; உட்சென்று கேட்டு வருகிறேன்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| தயவுசெய்து | எள்ளி | பார்த்திபன் |
| தடுமாற்றம் | குண்டலங்கள் | பேரரசர்கள் |
| அனுமதிப்பான் | நிருபன் | ஏவலாளர் |

### வினாக்கள்

1. அரசரைக் காணச் செல்வோர்க்கு வேண்டுவன யாவை?
2. கண்ணனைக் காண எவ்வெந் நாட்டு மன்னர்கள் வந்திருந்தனர்?

### பயிற்சி — 1

கந்தன் பாடத்தைப் படித்தான்.
படித்தவன் யார்? கந்தன்–செய்தவன். (எழுவாய்)

கந்தன் என்ன செய்தான்? படித்தான் - தொழில் - (பயனிலை)

கந்தன் எதைப் படித்தான்? பாடத்தை — செயப் படு பொருள்.

இவ்வாக்கியத்தில் மூன்று உறுப்புக்கள் உள்ளன. செய்பவன் எழுவாய் என்றும், செய்தொழிலைப் பயனிலை என்றும், செய்பொருளைச் செயப்படு பொருள் என்றும் கூறுவர். இவை மூன்றும் ஒரு வாக்கியத்தின் முக்கிய உறுப்புகளாகும்.

கந்தன் வந்தான்.

யார் வந்தான்?—கந்தன்—செய்பவன் (எழுவாய்)

என்ன செய்தான்?–வந்தான்-தொழில் (பயனிலை)

இவ்வாக்கியத்தில் இரண்டே உறுப்புகள் உள்ளன. அவை எழுவாயும் பயனிலையும் ஆகும்.

ஒரு வாக்கியத்தில் குறைந்தது எழுவாப் பயனிலை என்ற இரண்டு உறுப்புகள் இருக்கவேண்டும்.

பயிற்சி — 2

மாடு புல்லைத் தின்றது.
குதிரை ஓடிற்று.

இந்த வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது.

---

## 21. கண்ணனும் குசேலரும் — II

[காவற்காரன் திரு. கண்ணனை அடைந்து பணிகிறான்.]

**காவற்காரன்:—** சந்திர குலத்திற்கு விளக்குப்போன்ற தலைவரே, வணக்கம்; இந்திரன் முதலான தேவர்களாலும் காணமுடியாதவரே, வணக்கம்; தாமரை மலர்போன்ற கண்களையுடையவரே, வணக்கம்; பகைவர்க்குச் சிங்கம் போன்றவரே, வணக்கம்; துவாரகைக்குத் தலைவரே, வணக்கம்.

முன் நாளில் தங்களோடு அரிய நூல்களைக் கற்றவராம். தங்களுடன் அரிய நட்புப் பூண்டவராம்; கந்தை ஆடையைக் கட்டிக்கொண்டிருக்கிறார். குசேலர் என்னும் பெயர் உடையவராம். அரண்மனை வாயிலில் தங்களைக் காண வந்து காத்துக்கொண்டிருக்கிறார்.

**கண்ணன்:-** (இருப்பிடம் விட்டெழுந்து) குசேலரா! குசேலரா! உள்ளே வரவிடு! உள்ளே வர விடு! இதோ! நானே வருகிறேன். போ.

[காவற்காரன் விரைந்தோடி வந்து குசேலனை நோக்கி]

**காவற்காரன்:-** ஐயா, விரைவில் உள்ளே செல்லுங்கள். தாமதித்தால் கண்ணனே இங்கு வந்து விடுவார். சிறிதும் காலம் தாழ்த்தாதீர். தங்களைத் தடுத்து நாங்கள் கூறிய புன்மொழிகளை மன்னியுங்கள். அவற்றைக் கண்ணனிடம் கூறாதிருக்க வேண்டுகிறோம்.



[குசேலன் அரண்மனைக்குள் புகுந்து சென்றான். கண்ணன் எதிரே வந்து அழைத்துச் சென்று கட்டிலில் அமர்த்தினான். உருக்குமணி, சத்தியபாமை என்

பார் கவரி வீசினர். கண்ணன் காலைப் பிடித்துக் கொண்டே]

**கண்ணன்:-** இந்த அரிய கால்கள் நெடு வழி நடந்து இளைத்தனவே. நண்ப! குசேல! உனக்கு மணம் ஆயிருக்க வேண்டுமே! உன் மனைவி நற்குண நற்செயல்கள் உடையவளா யிருப்பாளே! உனக்குக் குழந்தைகள் பிறந்திருக்க வேண்டுமே! உனக்கு எத்தனை குழந்தைகள்? அவர்கள் எல்லோரும் கல்வி கற்கின்றனரா? ஒரு நாள் மழை பெய்த அன்று குருவுக்கு விறகு எடுத்து வரச் சென்றோமே ஞாபகம் இருக் கிறதா? அது போகட்டும் உன் மனைவி, என் னிடம் உன்னை வெறுங்கையோடு அனுப்பி இருக்க மாட்டாளே! தின்ன ஏதேனும் இனிய பண்டம் கொடுத்திருப்பாளே! அதனைக் கொடு.

[குசேலருக்குக் கண்ணனைக் கண்டதே பேரின்பம் தந்தது. அவர் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. குசேலன் வைத்திருந்த அவல் பொதியினை வாங்கி அவிழ்த்துக் கண்ணன் ஒரு பிடி அவலை உண்டான். அதற்குள் உருக்குமணி சத்தியபாமை என்பாரும் பங்கிற்கு வந்து உண்டனர். கண்ணன் குசேலரது கந்தை ஆடைகளைக் களைந்து சிறந்த ஆடை அளித்தான். இனிய உணவு அளித்து உபசரித்தான். குசேலன் கண்ணனையே தியானித்துக் கொண்டிருந்தான். சில நாட்கள் கழிந்தன. பின் கண்ணன் குசேலனின் கந்தை ஆடைகளைத் திருப்பிக் கொடுத்து ஊருக்கு அனுப்பி னான். குசேலன் செல்வம் பெறவேண்டும் என்று வந்த காரியத்தை மறந்து தியானித்துக் கொண்டே உட் சென்றது போல் வெளியே வந்தார்.]

**காவற்காரன் :–** நீண்ட நட்புக் கொண்ட கண்ணன் இம்முனிவர்க்கு யாதொன்றும் செய்ய வில்லையே! நல்ல ஆடைகள் அளிக்கலாகாதா?

ஒரு வண்டி அமர்த்தி ஊருக்குக் கொண்டுபோய் விடக்கூடாதா?

**ஒரு காவற்காரன் :–** அது எல்லாம் நமக் கென்ன தெரியும்? துறவிக்கு என்ன வேண்டும்? எதனை அவர் விரும்புவார்? பெரியார்கள் சொல்லா மலே அன்றோ செய்வர்; கண்ணன் யாது செய் வான் என்று யாவரே கூறவல்லார்?

[குசேலன் கண்ணனைத் தியானித்த வண்ணம் தாம் வந்த வழியே சென்றார். வீடு அடைந்ததும் செல்வம் நிறைந்திருப்பதைக் கண்டார்.]

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| சந்தேகம் | கோமான் | தரணிபன் |
| கையுரை | கந்தை | அரசன் |
| நகையாடுவர் | மதாணி | முத்தாரம் |
| துறவி | துரும்பு | வணக்கம் |
| சாத்திரம் | பூண்டவன் | புன்மொழி |
| தாழ்த்தாதீர் | களைத்து | தியானித்து |

**வினாக்கள்**

1. காவற்காரன் கண்ணனிடம் ஓடிச் சென்று கூறியவை யாவை?
2. குசேலன் வருகை கேட்ட கண்ணன் அன்பை எதனால் அறியலாம்?
3. கிருஷ்ணன் குறித்த முன்பு நடந்த நிகழ்ச்சி யாது?
4. கண்ணன் குசேலனை எவ்வாறு உபசரித் தான்?
5. உட்சென்றபடியே வெளியே வந்த குசேல னைப் பற்றிக் காவற்காரர் கூறியதென்ன?
6. பெரியோர் இயல்பு எவ்வாறு கூறப்பட்டுள் ளது?
7. அரசன் என்ற பொருளைத் தரும் வேறு சொற் கள் ஐந்து எழுது.

### கட்டுரைப் பயிற்சி

இந்நாடகத்தின் கதையை உன் சொந்த மொழியில் சுருக்கமாக எழுது.

### பயிற்சி – 1

ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் சில குறிகளை வாக்கியந்தோறும் பார்க்கிறீர்கள். அவற்றைப்பற்றி நீங்கள் அறியவேண்டும். அவை நிறுத்தக் குறிகள் எனப்படும். பாடங்களைப் படிக்கும்பொழுது பொருள் விளங்கவேண்டும். எத்த எந்த இடத்தில் எவ்வளவு எவ்வளவு நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும் என்பதை அக்குறிகள் காண்பிக்கின்றன.

,—இதனைக் காற்புள்ளி என்பர்; காமா என்றும் கூறுவர். இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும்.

:—இது அரைப்புள்ளி; இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

;—இது முக்காற்புள்ளி; இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

.—இது முற்றுப்புள்ளி; இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

?—இது வினாக் குறி; இது கேள்வியைக் காட்டும்.

!—இது உணர்ச்சிக் குறி; இது வியப்பு, இரக்கம் முதலான உணர்ச்சிகளைக் காட்டும்.

“”—தற்கூற்றுக் குறி; பிறன் கூறியதை அவன் கூறியபடியே கூறும்பொழுது முன்னும் பின்னும் இடவேண்டிய குறி.

கைந்நொடித்தலும், இயல்பாகக் கண் இமைத்தலும் கொள்ளும் நேரம் ஒரு மாத்திரை நேரமாகும்.

### பயிற்சி—2

கீழ்ககண்ட வாக்கியங்களில் சரியான நிறுத்தக் குறிகள் இடு:-

1. தலைவரே குசேலர் என்பார் உம்மைக் காண வந்துள்ளார்.
2. அவரை உள்ளே அனுப்பலாமா
3. கண்ணன் அன்றோ சிறந்த நண்பன்
4. கண்ணனும் நானும் ஓர் ஆசிரியரிடம் படித்தோம் என்று குசேலர் சொன்னார்

# செய்யுட் பகுதி

## 1. வெற்றி வேற்கை

### 1. இதற்கு இது அழகெனல்

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
4. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
5. குலமகட் கழகு தன்கொழுநனைப் பேணுதல்.
6. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
7. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.

### 2. ஆசிரியரும் கல்வியும்

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
3. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
4. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னுயிற் கீழ்இருப் பவனே.
5. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்.
6. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

### 3. பிழை பொறுத்தல்

1. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோராயின் பொறுப்பது கடனே.
2. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

## 4. நட்பு

1. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
2. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
3. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
4. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
5. கலக்கினும் தண்கடல் சேறாகாது.
6. ஒருநாள் பழகினும் மூர்க்கர் கேண்மை,
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
7. நூற்றாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

## 5. இவருக்கு இது இல்லை யெனல்

1. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
2. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
3. கேளும் கிளையும் கேட்டோர்க் கில்லை.

## 6. செல்வத்தின் தன்மை

1. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.
2. குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
3. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
4. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசரோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
5. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
6. எழுமலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்ப்பாழ் ஆகினும் ஆகும்.
7. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

## 2. வாக்குண்டாம்

### செய்நன்றி அறிதல்

1. நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

### மேன்மக்கள் தன்மை

2. அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

### காலத்தின் சிறப்பு

3. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் அன்றி உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

### மரம் போன்றவன்

4. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவை அல்ல நல்ல மரங்கள் — சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

### கற்றோன் சிறப்பு

5. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன்-மன்னர்க்குத்
தன்தேயம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

— ஔவையார்.

## 3. நல்வழி

### வீணாக வருந்துதல்

1. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா — இருந்
[தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

### நல்குடிப் பிறந்தார் தன்மை

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

### வாழ்க்கைத் துன்பம்

3. ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்:
இருநாளைக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

### உழவன் சிறப்பு

4. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

### செல்வத்தின் சிறப்பு

5. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்
[டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள்

— ஔவையார்.

## தனிப் பாடல்கள்

### பிதாக்கள்

1. பிறப்பித்தோன் வித்தைதனைப்பேணிக் கொடுத் [தோன்
சிறப்பின் உபதேசம் செய்தோன் — அறப்பெரிய
பஞ்சத்தில் அன்னம் படைத்தோன், பயம் தீர்த் [தோன்
எஞ்சாப் பிதாக்களென எண்.

### பழக்கம்

2. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும், தயையும்,
கொடையும் பிறவிக் குணம்.

### கற்றோர் முன் கல்லார்

3. காணுமல் வேணதெல்லாம் கத்தலாம்; கற்றூர் முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே — காணுமல்
பேச்சுப் பேச்சு என்னும் பெரும்பூனே வந்தக்கால்
கீச்சுக் கீச்சு என்னும் கிளி.

### கல்விச் செருக்கு கூடாது

4. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவு
உற்ற கலைமடந்தை ஓதுகிருள் — மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

### போவன

5. தாயோடு அறுசுவைபோம். தந்தையோடு கல்வி [போம்
சேயோடு தான்பெற்ற செல்வம் போம் — ஆய் [வாழ்வு
உற்றூர் உடன்போம் உடன்பிறப்பால் தோள் [வலிபோம்
பொற்றுலியோ டெவையும் போம்.

## 5. மதுரை வளம்

வாழை வடக்கீனும்; வான்கமுகு தெற்கீனும்.
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலம்காணும்; கதிர் உழக்கு நெற்காணும்;
அரிதாள் அறுத்துவர, மறுதாள் பயிராகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்
ஆனைகட்டும் தாளும் வானமட்டும் போராகும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை.

(அல்லியரசாணி மாலை)

## 6. அல்லியின் கொலு மண்டபம்

முத்து மிதியடியைத் தொட்டு மிகநடந்து
மாணிக்கக் கிரீடங்கள் மகுடம் முடி துலங்கத்
தாதியர்கள் சூழ்ந்துவரத் தனிக்கவரி வீசிவர
மாதர் புடை சூழ மண்டபத்தி லேறலுற்றாள்.
ஓராம் படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்.
இரண்டாம் படித்தளமாம் இரத்தனகிரி, மேடைகளாம்
மூன்றும் படித்தளமாம் முத்துப்படி வாசல்
நான்காம் படித்தளமாம் நவரத்தின மண்டபமாம்
ஐந்தாம் படித்தளமாம் அரக்குமணி மேடைகளாம்
ஆறும் படித்தளமாம் அழகான மேடைகளாம்
ஏழாம் படித்தளமாம் எழிலான மண்டபமாம்
எட்டாம் படித்தளமாம் எண்ணெய்க்கால் மண்டபமாம்
ஒன்பதாம் படித்தளமாம் ஓலைப்பூச் சாவடியாம்
பத்தாம் படித்தளமாம் பளிங்குமா மண்டபமாம்
ஆயிரங்கால் மண்டபத்தில் அல்லிராணி
[வந்தமர்ந்தாள்;
செம்பொன் முடி துலங்கத் திருக்கோயில்
[வந்தமர்ந்தாள்.

—அல்லியரசாணி மாலை

## குறிப்புரை

1. **வெற்றி வேற்கை:—** இதை இயற்றியவர் **அதிவீர ராமபாண்டியர்.** இவரது காலம் சுமார் 300 வருடங்களுக்கு முன் என்பர்.

1. கசடற – குற்றம் நீங்க. கிளே – சுற்றத்தார். செங்கோல் - நீதியுடன் ஆளுதல். கொழுநன் – கணவன். வறியோர் – ஏழைகள்.

2. இறைவன் – கடவுள். குலநலம் – குலத்தின் பெருமை.

3. பிழை – குற்றம். கடன் – கடமை. அரிது – கூடாத காரியம்.

4. குன்றுது - குறையாது. ஒளி - பிரகாசம். அருது – நீங்காது. தண் – குளிர்ந்த. கேண்மை – சினேகம்.

5. அச்சம் – பயம். நாணம் - வெட்கம். கேளும் – நட்பினரும்.

6. உடைமை - செல்வம். குஞ்சரம் – யானே. பெற்றம் – மாடு.

2. **வாக்குண்டாம்:—** இது ஔவையார் இயற்றிய நீதி நூல்களுள் ஒன்று. இந்த நூலில் கடவுள் வணக்கச் செய்யுள் 'வாக்குண்டாம்' என்று ஆரம்பமாவதால் இந் நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. பெரும்பாலும் பழமொழிகளேத் தழுவிச் செய்யப்பட்டது.

1. தளரா - சோர்வு அடையாமல். தெங்கு – தென்னேமரம். தாள் – அடிப்பாகம்.

2. அட்டாலும் – காய்ச்சினுலும். சுவை – ருசி. அளவளாய் – நன்கு கலந்து. மேன்மக்கள் – நல்லோர்.

3. அடுத்து - தொடர்ந்து. கருமங்கள் - காரியங்கள். அன்றி – அல்லாமல்.

4. காட்டகத்தே – காட்டில். நன்மரம் – நல்ல மரத்துக்கு ஒப்பாவான்.

5. மாசற [மாசு + அற] – குற்றம் நீங்க. சீர் தூக்கின் - ஆராய்ந்து பார்த்தல்.

3. **நல்வழி:—** இதுவும் ஔவையாரால் இயற்றப்பட்டதே. இது காப்புச் செய்யுள் உள்பட 41 செய்யுட்களையுடையது.

1. துஞ்சுவது — இறப்பது, மாந்தர் — மக்கள்.

2. அடி – பாதம். ஏற்றவர்க்கு – யாசிப்பவர்களுக்கு. இசைந்து – மனம் ஒப்ப.

3. ஏல் – ஏற்றுக்கொள். நோவு – துன்பம். இடும்பைகூர் – துன்பம் நிரம்பத் தரும்.

4. ஏற்றது – மேலானது. பழுது – குற்றம். பணி – வேலை.

5. இல்லான் – பொருள் இல்லாதவன். இல்லாள் – மனைவி. ஈன்றெடுத்த - பெற்ற.

4. **தனிப்பாடல்கள்:—**

1. பேணிக் கொடுத்தோன் – கற்பித்தவன். அன்னம் படைத்தோன் – உணவு கொடுத்தவன்.

2. கொடை – பிறர்க்குக் கொடுக்கும் தன்மை.

3. நாணுமல் – வெட்கம் கொள்ளாமல்.

4. கலைமடந்தை – சரசுவதி தேவி. ஓதுகிறாள் – சொல்லுகிறாள்.

5. சேய் – குழந்தை. ஆய்வாழ்வு - நல்வாழ்க்கை. தோள்வலி – பலம்.

5. **மதுரை வளம்:—**

இச்செய்யுள் மதுரை வளப்பத்தைப்பற்றிக் கூறுகிறது. இப்பகுதி அல்லியரசாணி மாலை என்ற நூலில் உள்ளது. அந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர் என்பர். அல்லி என்பவள் பாண்டி நாட்டை ஆண்ட ஓர் அரசி. அவள் அர்ச்சுனனை மணம் செய்துகொண்டாள். அவளைப் பற்றிக் கூறும் நூல் அல்லியரசாணி மாலை ஆகும்.

கட்டு — ஒரு நெற்கட்டு. தாள் — பயிர். மாளாது — முடியாது.

6. **அல்லியின் கொலு மண்டபம்:—**

தொட்டு - அணிந்து. தாதியர் - தோழிகள். முடி – தலை. கிரி - மலை. எழில் – அழகு.

139649

RSR/655
64-C
438